...நகர சபை, யாழ்ப்பாணம்,

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 மாசி 27 வெள்ளிக்கிழமை (11.03.2011) பக்கங்கள் 12+IV ஓசை – 162

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA



(C/421)

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

## சர்வதேச அழுத்தங்களை எதிர்கொள்ள அரசு தயாராக இருக்கிறது



(கொழும்பு)

நாட்டிற்கு எதிராக பல்வேறு அழுத்தங்கள் சர்வதேச சமூகத்தினால் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. இந்த அழுத்தங்களை அரசாங்கம் எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறது.

அத்தோடு நாட்டிற்கு எதிரான அழுத்தங்கள் சர்வதேசத்தில் இருந்து பிரயோகிக்கப்படுமாயின், மக்களின் நம்பிக்கை அரசாங்கத்திடம் தங்கியுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர்

(11ஆம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் படுகொலை; யாழ்.நீதிவான் அறிக்கை

### கொழும்பு உயர்நீதிமன்றில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம், மிருசுவில் பகுதியில் எட்டு பொது மக்களைக் கொலை செய்த இடத்தை, நேரில் சென்று பார்வையிட கொழும்பு மேல் நீதிமன்ற மூவரடங்கிய நீதிபதிகள் தீர்மானித்துள்ளனர்.

இதற்கு ஏற்ற நடவடிக்கைகளை, பாதுகாப்புச் செயலாளர் மற்றும் நீதியமைச்சின் செயலாளர் ஆகியோர் மேற்கொள்ளுமாறு இந்த நீதிபதிகள் குழு வலியுறுத்தியுள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் பயிற்சி முகாம்கள் தமிழ்நாட்டில் எங்கும் இல்லை

## அடியோடு மறுக்கிறது இந்திய அரசு

(கொழும்பு)

**தமிழ்நாட்டின் எந்தப் பகுதியி லும் புலிகளின் இரகசியப் பயிற்சி முகாம்கள் எதுவும் இயங்கவில்லை என்று இந்திய அரசு இலங்கை அரசி டம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. தமிழ்நாட்டில் இரகசியமான சில இடங்களில் புலிகளின் பயிற்சி நிலையங்கள் இயங்குவதாக பிரதமர் டி.எம்.ஜயரட்ன நாடாளு மன்றத்தில் தெரிவித்ததை கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் முற்றாக நிராகரித்துள்ளது.** (11ஆம் பக்கம் பார்க்க)

## கே.பி. மீது தந்திரோபாய விசாரணைகள்; யாரும் அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை

### அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா கூறுகிறார்






(கொழும்பு)

கே.பி. என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் மீதான விசாரணைகள் தொடர்ந்து நடாத்தப்பட்டு வருகிறது. சில விடயங்களைக் கையாள்வதற்கு தந்திரோபாயங்கள் பின்பற்றப்படுவது வழக்கம். அதுவே கே.பி. விடயத்திலும் நடக்கிறது. எனவே அது குறித்து எவரும் வீணாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்று சுற்றாடல் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார். கே.பி., அரசாங்கத்தால் எவ்வாறு நடத்தப்படுகின்றார் என்பது குறித்து யாரும் கவலைப்படவோ அலட்டிக் கொள்ளவோ வேண்டிய தில்லை. கே.பி. தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சிக்கலான விடயங்களைக் கையாள்வதற்கு தந்திரோபாயங்கள் பிரயோகிக்கப்படுவது தவிர்க்க முடியாதது. அதுபோன்றுதான் கே.பி. விடயத்திலும் அரசு அவ்வாறே கையாள்கிறது.

விசாரணையின்பின் அரசு கே.பி. தொடர்பில் பிழையாக நடக்குமாயின் அப்போது இதுகுறித்து பேசுவோம் என அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா மேலும் தெரிவித்தார்.

## அரசியலுக்கு முழுக்கு தலாய்லாமா அறிவிப்பு



(கொழும்பு)

அரசியல் வாழ்வில் இருந்து ஓய்வு பெறுவதாக திபெத் ஆன்மீகத் தலைவரான தலாய்லாமா நேற்று தெரிவித்துள்ளார்.

தலாய்லாமா, தான் அரசியல் வாழ்க்கையில் இருந்து விரைவில் ஓய்வு பெறப்போவதாக ஏற்கனவே அறிவித்திருந்தார். அவர் தற்போது அரசியல் தலைவர் பதவியில் இருந்து விலகினாலும், தொடர்ந்து ஆன்மீகத் தலைவராக இருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திபெத் மக்களால் தெரிவு செய்யப்படும் தலைவர்தான் திபெத்திற்குத் தேவை என்று நான் 1960களில் இருந்தே வலியுறுத்தி வருகிறேன். அவ்வாறு (11ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா மாவட்டத்தில் அபிவிருத்தி மீளாய்வு

### பசில் ராஜபக்ஷ தலைமையில் கூட்டம்

(வவுனியா)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ள அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(11ஆம் பக்கம் பார்க்க)

## அடிமட்ட மக்களின் வாழ்வாதாரத் திட்டத்துக்கு ஜப்பானிய அரசாங்கம் 18 மில்லியன் நிதியுதவி

(கொழும்பு)

திருகோணமலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் இரண்டு வாழ்வாதாரத் திட்டங்களை முன்னெடுப்பதற்காக ஜப்பானிய அரசாங்கம் அடிமட்ட மனித பாதுகாப்பு நன்கொடைத் திட்டத்தின் கீழ் 18 மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் குனியோ தக்காஷியும் இலங்கை சமூக நடவடிக்கைகளுக்கான அபிவிருத்திச் சங்கம் மற்றும் சமூக அபிவிருத்தி மன்றம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் நேற்று ஜப்பானிய தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்ற வைபவத்தின் போது இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் சமூக முன்னேற்ற செயற்றிட்டத்திற்காக இலங்கை சமூக நடவடிக்கைகளுக்கான அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படவுள்ளது.

இதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தில் பெருந்தோட்ட மக்களின் சுகாதார மற்றும் வதிவிடச் சூழல் முன்னேற்ற செயற்றிட்டத்திற்காக சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஊடாக எட்டு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படவுள்ளது.

குறித்த 18 மில்லியன் நிதி

(11ஆம் பக்கம் பார்க்க)

## துரித திறன்பெறுகை நிகழ்ச்சித் திட்டம்; வடக்கில் 5000 பேருக்கு புலமைப்பரிசில்!

### நலிவடைந்த குடும்பங்களுக்கு முன்னுரிமை

(தொல்புரம்)

வடமாகாணத்தில் க.பொ.த (சா.த), க.பொ.த (உ.த) பரீட்சைகளில் தோற்றிப் பல்கலைக்கழகம் புகமுடியாமல் தொழில்நுட்ப பயிற்சியை அல்லது வேலை பெற்றுக்கொள்வதை நோக்க மாகக் கொண்டுள்ள மாணவர்களுக்கு உடனடி தொழில்வாய்ப்பொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக கல்வி அமைச்சின் துரிய திறன் பெறுகை நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வடமாகாணத்தில் 5ஆயிரம் புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

மாணவர்களின் ஆங்கில மொழித்திறன்கள், கணினித் திறன்கள் மற்றும் வியாபார தொழில்முயற்சியாண்மைத் திறன்களை அடிப்படையாகக் கொண்டே இப்புலமைப் (11ஆம் பக்கம் பார்க்க)

# நவீனமுறையில் பதநீர் உற்பத்தி புதிய ஆராய்ச்சிகள் ஆரம்பம்

## பனை அபிவிருத்திச்சபைத்தலைவர் தகவல்

(யாழ்ப்பாணம்)

எமது நாட்டை பொருளாதாரத்தில் அபிவிருத்தி அடையச் செய்வதற்கு மகிந்த சிந்தனையின் கீழ் நடைமுறைப் படுத்த இலங்கை பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சிப் பிரிவும், இலங்கை தொழில் நுட்ப நிறுவனமும் இணைந்து பதநீரை நவீன முறையில் தயாரித்து நீண்ட காலத்திற்கு பாதுகாத்து வைப்பதற்கு உரிய ஆராய்ச்சி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ப.சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் கௌரவ டக்ளஸ்தேவானந்தாஅவர்களின் சிந்தனையின் அடிப்படையில் தொழிற்சாலை ரீதியில் தரமான பதநீரை உற்பத்தி செய்து இதற்கு சிறந்த சந்தை வாய்ப்பை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஏற் படுத்துவதன் மூலம் பனை வளத்தைச் சார்ந்து வாழும் மக்க ளுடைய வாழ்வாதாரத்தை மேம் படுத்த முடியும்.

மேலும் மகிந்த சிந்தனையின் 'அடிப்படையில் பொருளாதாரத்தில் அபிவிருத்தியடைவதனூடாக மக்களுக்கு மகிழ்வையும், ஆரோக்கியத்தையும் ஏற்படுத்தும் பதநீரை சிறந்த முறையில் உற்பத்தி செய்வதன் மூலம் நல்லதொரு பொருளாதார வளமுள்ள நாட்டை உருவாக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# கண்ணிவெடி அபாயம்; விழிப்புணர்வுக்கல்வி

## பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

கண்ணிவெடி அபாயத்தைத் தவிர்ப்பதற்கான கல்வியை துணுக்காய் கல்விவலய பாடசாலைகளில் போதிப்பதற்காக ஒட்டுசுட்டான் கல்வி வலயத்தில் தற்பொழுது .முப்பத்து மூன்று பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றுக்கான நிதி அனுசரணை யுனிசெவ் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாடசாலை ஒன்றிற்கு தலா இருபத்தையாயிரம் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டுள்ளன.

மிதிவெடி, பொறிவெடி, ஆட்களுக்கெதிரான கண்ணிகள் மற்றும் டாக்கிகளுக்கெதிரான வெடிகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் மிதிவெடி, கண்ணிவெடி உள்ள இடங்களைக் குறித்துக்காட்டும் குறியீடுகள், கம்பங்கள், நாடாக்கள் மற்றும் இவை சேமித்து வைக்கும் இடங்கள், வகைகள், பாவனைக்குரிய காலம என்பன தொடர்பான கல்விக்கு இது பயன்படுத்தப்படும் எனப்படுகிறது. (23)

# விலைமதிப்பீட்டுப்பணிகள் யாழில் மீண்டும் ஆரம்பம்

## யாழ். மாநகரசபை ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கடந்த 1990ஆம் ஆண்டின் பின், யாழ்ப்பாண மாநகர எல்லைக்குட்பட்ட குடியிருப்பாளர்களது குடியிருப்புக்காணிகள், வீடுகள், நிறுவனங்கள் ஆகிய நிலையான சொத்துக்களை மதிப்பீடுசெய்யும் பணியில் யாழ். மாநகரசபையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் துரிதமான முறையில் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றையதினம் நல்லூர் பிரதேச செயலக வலயத்துக்குட்பட்ட அரியாலை, சிவியாதெரு, தபால் கட்டைச்சந்திப்பகுதிகளை சார்ந்த குடிமனைகள் மற்றும் காணிகளிலும் கட்டங்களை அளந்தும் மற்றும் வருமானம் தரும் மரங்களின் எண்ணிக்கை என்பன போன்றவிபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

வீடுகளின் அளவு, அறைகளின் எண்ணிக்கை ஹோல் எண்ணிக்கை சமையல், குளியல் அறை என சகல விபரங்களும் பிரதான குடியிருப்பாளரிடமிருந்து பெறப்பட்டு வருகிறது. கடந்த வருடம் சோலை வரி செலுத்திய ரசீது மற்றும் அதன் இலக்கம் என்பனவும் கேட்கப்படுகின்றன.

வாடகைக்குடியிருப்பாளரிடம் அவர்கள் செலுத்தும் சரியான வாடகை விபரத்தையும் கேட்டுப்பெற்று வருகின்றனர்.

இதற்கு முன்பதாக யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பகுதிகளில் குறிப்பாக ஈச்சமோட்டைப் பகுதிகளில் இந்த மதிப்பீட்டுப்பணிகள் நிறைவடைந்துள்ளதாக அரியாலைப் பகுதியின் மதிப்பீட்டாளர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். அளவு நாடா கொண்டு கட்டடங்கள் அளந்து பதியப்படுகின்றன. (23)


## சிறு விளம்பரங்கள்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel -021 222 8680, 0775925088 (R017)



## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

# கேள்வி அறிவித்தல் - 2011

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட மானிப்பாய் பட்டின உப அலுவலகத்தின் சந்தைக்கட்டிடத்தொகுதியில் உள்ள கடைகளை வாடகை அடிப்படையில் வியாபாரம் செய்வதற்கு வழங்குவதற்கான கேள்விகள் செயலாளரால் கோரப்படுகின்றது.

| மானிப்பாய் பொதுச்சந்தை கட்டிடத்தொகுதி | மாத வாடகை | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|
| 1. உட்புற கடை இல: 01 | 900/= (VAT,NBT தவிர்ந்த) | ரூபா 300000/= |
| 2. உட்புற கடை இல: 06 | 900/= (VAT,NBT தவிர்ந்த) | ரூபா 300000/= |

01 கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 14.03.2011 - 18.03.2011

02 கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி : 21.03.2011 - நண்பகல் 12.00 மணிவரை

03 கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி : 21.03.2011 பிற்பகல் 2.00 மணி

04 கேள்விப்பத்திர கட்டணம் : ரூபா 500.00 உடன் VAT,NBT உம் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப்பணம் ரூபா 3000.00யும் செலுத்தி கேள்வி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

05 கேள்வி விண்ணப்பங்கள் குறிக்கப்பட்ட தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு *செயலாளர் வலி. தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய* என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாகக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது சபையின் தலைமையலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் போடப்படல்வேண்டும்.

06 கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும், தாம் வதியும் இடத்தின் வதிவிடச்சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

07 உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின் தவறுனராக கண்டுபிடிக்கப்பட்டால் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

08 ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவரின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

09 தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் இக்கடைக்கென குறிப்பிடப்பட்ட உரிமப்பணம், 3 மாத வாடகை வைப்புப் பணம் என்பவற்றுடன் VAT,NBT சேர்த்து 28.03.2011 திகதிக்கு முன்னர் மானிப்பாய் பட்டின உப அலுவலகத்தில் செலுத்தி வாடகை உடன்படிக்கைகளைச் செய்து கொண்டு கடையைப் பொறுப்பேற்றல் வேண்டும்.

10 குடும்ப அங்கத்தவர் ஒருவர் ஒரு கேள்விக்கு மேல் சமர்ப்பிக்க முடியாது.

11 கேள்வியை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

12 கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமையலுவலகத்திலும், மானிப்பாய் பட்டின உப அலுவலகத்திலும் அலுவலகநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**திருமதி புஸ்பமலர் சிவலிங்கம்,**
**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

2011.03.10 (C/508)


# கல்நெரிக்கும் இயந்திரம் மீண்டும் பாவனையில்

(யாழ்ப்பாணம்)

பழுதடைந்திருந்த யாழ். மாநகர சபையின் வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டுவந்த கல்நெரிக்கும் இயந்திரம் மீளவும் யாழ். மாநகரசபையினரினால் திருத்தப்பட்டு வீதி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு திருத்தப்பட்ட கல்நெரிக்கும் இயந்திரம் நேற்று முன்தினம் மீளவும் யாழ். வைத்தியசாலை வீதியில் வீதி திருத்தப்பணிகளில் ஈடுபட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

தற்சமயம் யாழ். மாநகரசபையிடம் இவ்வாறான இயந்திரம் ஒன்று மட்டுமே உள்ளது.

மேலும் ஒரு இயந்திரம் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கையில் யாழ். மாநகரசபை ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (பா)

# நியாய விலையில் நெல் கொள்வனவு

(கொழும்பு)

இந்த வருடத்தில் பெரும்போக நெற்செய்கையின்போது நெல் சந்தைப் படுத்தல் திணைக்களத்தினூடாக 2 இலட்சம் மெற்றிக்தொன் நெல்லை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறை அமைச்சர் ஜோன்சன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் கிழக்கு மாகாணத்தில் சில பகுதிகளில் நெல் கொள்வனவு இடம் பெறவுள்ளதாகவும், இதில் சம்பா ஒரு கிலோ 30 ரூபாவிற்கும், நாடு ஒரு கிலோ 28ரூபாவிற்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மின்வெட்டு

(யாழ்ப்பாணம்)

மின்மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு 12.03.2011 சனிக்கிழமை அன்று காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை புத்தூர், வாதரவத்தை, வீரவாணி, ஆவரங்கால், ஊறணி ஆகிய இடங்களிலும், 13.03.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, யாழ்ப்பாணம் பட்டணப் பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.



யாழ்ப்பாணம் தேசியக்கல்வியற் கல்லூரியினால் தொழிலதிபர் பேரம்பலம் நாகரட்ணம் அவர்களுக்கு 'கல்விக்காருண்யன்' எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கும் விழா நேற்று நடைபெற்றபோது, யாழ். தேசிய கல்வியற்கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் பட்டத்தினை வழங்குவதனையும், இந்நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம். (படம்:- மிதுலன்)

பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும், முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்து விடும்.

-விவேகானந்தர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## வாக்குறுதிகள் வேண்டாம்

ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைகள் தொடர்பான விவாதம் சூடுபிடித்துள்ளது. மனித உரிமைகள் தொடர்பில் அக்கறையெடுக்கும் அமைப்புக்கள் தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்து வருகின்றன.

குறிப்பாக இலங்கை தொடர்பாக பல அமைப்புகள் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து தமது அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன.

இந்தநிலையில் சிறைகளில் வருடக்கணக்காக வாடும் பெண்கள் தமது விடுதலைக்காக குரல் கொடுக்க யாருமில்லையெனக் கூறியுள்ளனர்.

யுவதிகள், தாய்மார்கள், அவர்களுடன் பிள்ளைகள், வயோதிபப் பெண்கள் என தாம் பெரும் துயரத்துடன் வாழ்வதாகவும், எதிர்காலம் குறித்த நம்பிக்கைகள் இழந்து தவித்து நிற்பதாகவும் கூறியிருக்கின்றனர்.

விசாரணைகள் நடத்தப்படாமலும், குற்றம் சுமத்தப்படாமலும் தாம் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும், தொடரும் இந்நிலையிலிருந்து தமக்கு விடுதலையளிக்கப்பட வேண்டுமெனக் கோரியுள்ளனர்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு தரப்பினர்களால் தமக்கு வாக்குறுதிகள் வழங்கப்பட்டபோதும், தமது விடுதலைக்கு அந்த வாக்குறுதிகள் உதவவில்லை என்பதால், தாம் மிகவும் ஏமாற்றமடைந்திருப்பதாகவும் நம்பிக்கை இழந்து நிற்பதாகவும் கூறியிருக்கின்றனர்.

தம்மோடு சிறைகளில் வளரும் பிள்ளைகளின் கல்வியும் எதிர்காலமும் சீரழிந்து போயிருப்பதாக அந்தக் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தம்மில் பெரும்பாலானவர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாக அவர்கள் கூறியுள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் மனிதாபிமான அடிப்படையில் தமக்கு விடுதலை வழங்க வேண்டும் என்றும், அந்த நம்பிக்கையைத் தவிர வேறொரு பிடிமானமான நம்பிக்கை இல்லையென்றும் கூறியிருக்கும் அவர்கள், தமது எதிர்காலம் குறித்தும் தமது பிள்ளைகள், குடும்பங்கள் குறித்தும் கருணையோடு சிந்திக்க வேண்டும் என்றும் கேட்டிருக்கின்றனர்.

பயங்கரவாதத்துக்கு முடிவு கட்டப்பட்டுள்ளது. அதில் நேரடியாக சம்பந்தப்பட்டவர்களுக்குக்கூட புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலையும் வழங்கப்படுகிறது.

மீண்டும் எமது தாய்நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்காத வண்ணம் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், சந்தேகத்தின்பேரில் கைதாகி முறையான விசாரணைகள் இன்றி சிறைகளில் வாடும் பெண்களுக்கு மட்டுமல்ல, ஏனையோருக்கும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை வழங்கப்படுவது வரவேற்புக்குரியது. பலபேரின் கண்ணீரைத் துடைக்கவும் வல்லது.

-ஆசிரியர்-

# மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழாக்கள் அமைய வேண்டும்

## மகளிர் தின விழாவில் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர்



(யாழ்.நிருபர்)

சமூகத்தில் பெண்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. சமூக, பொருளாதார அரசியல் ரீதியில் பெண்களுக்கான உரிமைகளை வலிறுத்தும் நோக்குடன் கடந்த நூறு வருடங்களாக இத்தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் (தோழர் கமல்) குறிப்பிட்டார்.

வடமாகாண கல்வி பண்பாட்டுதுறை விளையாட்டமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், யாழ்மாநகராட்சி மன்றமும் இணைந்து நடத்திய சர்வதேச மகளிர்தின விழா கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழவில் தோழர் கமலேந்திரன் தொடர்ந்து உரையாற்றுகையில்-

கடந்த காலங்களில் இவ்வளவு சிறப்பாக மகளிர் தின விழாக்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவில்லை. இம்முறை வெகு விமரிசையாக இத்தினம் இங்கு கொண்டாடப்படுகிறது. இனி வருங்காலங்களில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தத் தக்க வகையில் இத்தகைய விழாக்கள் நடத்தப்பட வேண்டும்.

இன்றைய விழாவுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள விருந்தார். நாடாளுமன்றம் கூட வுள்ளதால் அவர் உடனடியாகக் கொழும்பு செல்ல வேண்டி இருந்ததால் அவரால் இந்த விழாவில் கலந்துகொள்ள முடியவில்லை எனத் தெரிவித்து அவரது செய்தியையும் வாசித்தார்.

## கலாபூஷணம் விருது வழங்க விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

இந்த வருடத்திற்கான கலாபூஷணம் விருது வழங்குவதற்காக கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதாக கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அறுபது வயதிற்கு மேற்பட்டவர்களே இந்த விருதிற்கு விண்ணப்பிக்க முடியும். தகுதியானவர்கள் மாகாண மட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படுவர்.

எழுத்தாளர்கள், பாரம்பரியமாகத் தொழிலைக் கொண்டுள்ள சிற்பம், சித்திரவேலை, நெசவாளர், நாடகம், நடனம், மேளகாரர், சங்கீதம் போன்ற துறைகளில் ஈடுபடுபவர்கள் இந்த விருதுக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் அனைத்தும் மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்களூடாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்களினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பும் இறுதித் திகதி எதிர்வரும் 30 ஆம் திகதி ஆகும். விண்ணப்பங்களை 8ஆவது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்குத் தமது சுய முகவரியிட்ட விலாசத்துடன் அனுப்ப வேண்டும். மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் 011 2872031 என்ற தொலைபேசி இலகத்தினூடாகத் தொடர்புகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சக்தி கீரிடா என்ற தேசிய அமைப்பினால் யாழ். வீரர்களுக்கான பயிற்சிப்பட்டறை

(பருத்தித்துறை)

சக்தி கீரிடா என்ற தேசிய அமைப்பு யாழ்.மாவட்டத்திலுள்ள 5 கல்வி வலயங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட வீர, வீராங்கனைகளுக்குப் பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தவுள்ளது.

இதில் ஒவ்வொரு வலயத்திலிருந்தும் 10 வீர வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டு இப்பயிற்சிப் பட்டறைக்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிப் பட்டறை நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8 மணிக்குத் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியைப் பெறும் வீரர்களில் 15 பேர் தெரிவுசெய்யப்பட்டு பெருவிளையாட்டு மற்றும் மெய்வல்லுநர் போட்டிகள் தொடர்பாக மேலதிக பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

அத்துடன் தெரிவு செய்யப்படும் வீரர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக மாதம் ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ர.செல்வகுமரன் தெரிவித்துள்ளார். (109)

## இலங்கையில் அமைக்கப்படும் கலைக்கூடம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் திறக்கப்படும்

(கொழும்பு)

தென்னாசியாவிலேயே மிகப் பெரிய கலைக்கூடம் இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இதன் நிர்மாணப் பணிகள் விரைவில் நிறைவடையவுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் வரும் சிங்கள-இந்து புத்தாண்டு தினத்தன்று திறந்து வைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடப்படுமென கலாசார மற்றும் மரபுரிமைகள் அமைச்சர் ரி.பி. ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

3080 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கலைக்கூடக் கட்டடம் நிர்மாணிக் கப்பட்டு வருகிறது. இந்தக் கட்டுமானப் பணிக்கான எழுபத்தைந்து வத செலவை சீன அரசாங்கம் செய்து தருவதாக உடன்பட்டுள்ளது. மிகுதியாக உள்ள 25 வீத செலவுகளை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளும். எனினும் முழுக் கட்டுமானப் பணிகளையும் செய்து தருவதாக சீன அரசாங்கம் உடன்பட்டிருக்கிறது. 2.17 ஏக்கர் பரப்பளவில் 14 ஆயிரம் சதுர அடியில் இந்தக் கலைக்கூடம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இங்கு 350 வாகனங்களை ஒரே நேரத்தில் நிறுத்த முடியும். இந்தக் கட்டடத்தில் 1288 ஆசனங்கள் அமைக்கப்படவுள்ளதுடன் ஒரே நேரத்தில் மூன்று நாடகங்களையும் மேடையேற்ற முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

## மீனவர்களுக்கும் காப்புறுதித் திட்டம்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சகல மீனவர்களும் காப்புறுதித் திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நீரியல் வளத் திணைக்களத்தில் அண்மையில் இடம்பெற்ற கடன் திட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

எதிர்வரும் 23ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள இந்தக் காப்புறுதித் திட்டத்தில் ஒவ்வொரு மீனவரும் உள்வாங்கப்படுவர்.

இந்தக் காப்புறுதித் திட்டத்தை கடற்றொழில் மற்றும் நீரியல் வளத துறை அமைச்சுடன் இணைந்து செலிங்கோ காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

கடலில் ஏற்படும் விபத்தினால் மீனவர் ஒருவர் உயிரிழக்க நேரிட்டால் அவரது குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபா இந்தத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும். இத்திட்டத்தில் 750 ரூபாவிலிருந்து மீனவர்கள் கடன் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவா தெரிவித்தார்.

# துண்டிப் பிரதேசமக்கள் தும்புத் தொழிலை மேற்கொள்ள அமைச்சர் டக்ளஸ் உதவுவார்

## சாரண உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலங்களில் தேக்க நிலையில் இருந்த சாரணர் இயக்கத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கு குடாநாட்டில் உள்ள பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் முழுமையான ஒத்துழைப்பினை வழங்கவேணடும்.

இவ்வாறு கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் விழாவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய யாழ்.மாவட்ட சாரண உதவி ஆணையாளர் செ.தேவரஞ்சன் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் சு.சண்முககுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேவறஞ்சன் தொடர்ந்து பேசுகையில்:

யாழ்.மாவட்டத்தில் சகல பாடசாலைகளிலும் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்படவேணடும். இதற்கு சகல பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். சாரண வளவாளர்கள் மாணவாகளுக்குத் தேவையான வகுப்புகளையும் பயிற்சிகளையும் வழங்குவதற்கு ஏற்ற ஒழுங்குகளையும் அதிபர்கள் செய்து தரவேண்டும்.

வெகுவிரைவில் சாரண மாணவர்களுக்கான பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதற்கான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இரண்டாவது வடமாகாண ஜம்போறி மே மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

உதவி மாவட்ட சாரண ஆணையாளர் எஸ்துஸ்ஜெயந்தன் உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர் (10)

## பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச்சபைக்கு கணனிகள், துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பு

(வடமராட்சி)

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினர் அப்பகுதி இளைஞர், யுவதிகளின் நன்மை கருதி இலவச கணனிப்பயிற்சி வகுப்பினை நடத்தவுள்ளனர்.

பச்சிலைப்பள்ளியைச் சேர்ந்த உபகாரி ஒருவர் தனது சொந்தக்கிராமமான தம்பகாமத்துக்கு வந்திருந்த போது பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சபைக்கு சுமார் 51/2 லட்சம் ரூபா பெறுமதியான கணனிகளையும், மகளிருக்கான இரு துவிச்சக்கர வண்டிகளையும் அன்பளிப்புச் செய்திருந்தார்.

அன்பளிப்பாகப் பெறப்பட்ட கணனிகள் மூலமே மேற்படி பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

அவரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட இரண்டு துவிச்சக்கர வண்டிகளையும் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார், எஸ்.சிவநாதன் ஆகியோர் இரண்டு விதவைப் பெண்களுக்கு வழங்கியுள்ளனர்.

இதேவேளை இப் பிரதேசத்தல் உள்ள 80 வரையான விதவைகள் இனங்காணப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் மாதம் இருவருக்கு என்ற வீதத்தில் துவிசசக்கர வண்டிகள் வழங்கப்பட விருப்பதாகப் பேரவையின் செயலாளர் தெரிவித்தார். (70)

## மாதனைக்கிராம வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மாதனை கிராமத்திலுள்ள வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது

பல இலட்சம் ரூபா செலவில் இவ்வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதுடன் இதற்கான ஆரம்பகட்ட வேலைகள் அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கப ்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கிராமத்தில் நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாமல் கைவிடப்பட்ட இவ் வீதிகள் 6 கட்டங்களாகப் புனரமைபு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதற்கான கேள்வி அறிவித்தலை வீதி அபிவிருத்தி அதிகாரசபை கோரியுள்ளதுடன் எதிர்வரும் 18 ஆம் திகதியுடன் கேள்வி அறிவித்தல் காலம் முடிவடைகிறது எனவும் தெரிவிக்கப படுகிறது. (100)

## செயற்கைக் கால் பொருத்தப்படுகிறது

(வவுனியாநிருபர்)

விபத்து மற்றும் யுத்த காலத்தில் கால்களை இழந்தவர்களுக்கு வவுனியா அரசினர் பொதுவைத்தியசாலையில் தினமும் குறைந்தது மூவருக்கு செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டு வருகின்றது என வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் எஸ்.சத்தியமூர்த்தி தெரிவித்தார். கடந்த மூன்று மாதகாலத்தில் 50 பேருக்கு செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு அமைப்பு ஒன்றின் நிதி உதவியுடன் வெளிநாட்டு நிபுணர்களே இந்தச்செயற்கைக் கால்களைப் பொருத்திவருகின்றனர் எனவும் அவர் மேலும் தொிவித்தார் (39)

# கொத்தணி நிலையங்கள் அமைக்கப்படமாட்டாது

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நடைபெறவுள்ள பிரதேச சபைத் தேர்தலில் இம்முறை இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கென அமைக்கப்படும் கொத்தணி முறையிலான வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படமாட்டாது என வவுனியா மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மக்கள் தேர்தல் தினத்தன்று அமைக்கப்படும் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று அங்கு தங்களது ஆள் அடையாள அட்டையை உறுதிப்படுத்தி வாக்களிக்க முடியும். அத்துடன் மக்கள் வாக்களிப்பதற்கு ஏதுவாக இ.போ.ச பேருந்தும் சேவையில் ஈடுபடுத்தப்படும். பேருந் துக் கட்டணத்தை வாக்காளர் களே செலுத்த வேண்டும்.இம்முறை தபால் மூல வாக்களிப்பு வவுனியாவில் மிக அமைதியான முறையில்நடை பெற்றதாக அவர் மேலும் தெரிவித்தார் (39)

## முல்லைத்தீவுக்கான பேருந்து சேவைக்கு படையினரிடம் அனுமதிபெறக் கடிதம்

(யாழ்.நிருபர்)

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலை, பரந்தன் ஊடாக முல்லைத தீவுக்கு பேருந்துச் சேவையை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது.

மேற்படி சேவையை நடத்துவதற்கான அனுமதியை வழங்குமாறு பாதுகாப்புப்படை அதிகாரிக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக கோண்டாவில் சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மன்னார் போன்ற இடங்களுக்கும் பேருந்துச் சேவையை நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. (10)

## தவிசாளர் நியமனம்

(பருத்தித்துறை)

நிதி அமைச்சின் மத்தியசபை ஆணைக்குழுவின் பதில் செயலாளராக வாசனா பி.குணரட்ணவினால் கரவெட்டி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மத்தியஸ்தர் சபைத் தவிசாளராக சிதம்பராக் கல்லூரி அதிபர் சி.நற்குணலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இம் மத்தியசபையின் நியமனக்கடிதங்கள் - ஆவணங்கள் ஆகியவற்றை கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன தவிசாளரிடம் ஒப்படைத்துள்ளதாகத தெரிவிக்கப்படுகிறது. (109)

## மெய்வல்லுநர் போட்டி

(பருத்தித்துறை)

கரவெட்டி ஞானாசாரியர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ச.ஸ்ரீராமச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா பிரதம விருநதினராகவும் ஓய்வு பெற்ற கரவெட்டி கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.அம்பலவாணர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளார்.(109)

## 7 இலட்சம் ரூபா திருட்டு

(வவுனியா)

வவுனியா கடைவீதியிலுள்ள வர்த்தக நிலைய மொன்று கடந்த செவ்வாய்க்கிழமை உடைக்கப்பட்டு 7 இலட்சம் ரூபா பணம் திருடப்பட்டுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வர்த்தக நிலைய உரிமையாளர் காலையில் தனது கடையை பார்த்தபோது கடை உடைக்கப்பட்டு மேசைக்குள இருந்து 7 இலட்சம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இதனை அடுத்து உரிமையாளர் இது தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (39)

## நிர்வாகத் தெரிவுக்கு ஏற்பாடு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் வருடாந்த கூட்டத்தை நடத்தி வைப்பதற்கு யாழ்.மாநகராட்சி மன்றம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்தப் பொதுக்கூட்டத்தை நடத்தி புதிய நிர்வாகம் ஒன்றைத் தெரிவு செய்து அதன் அபிவிருத்தியை முன்னெடுப பதற்கும ஏற்பாடுகள் மேற்கொளளப்பட்டுள்ளது. (25)

## அறிவுறுத்தல்

(பருத்தித்துறை)

தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளுக்கான பயிற்சிப்பட்டறை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் வடமாகாணத்திலுள்ள பாடசாலைகள் கோட்டமட்ட, உபகோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளை எதிர்வரும் 15,16,17 ஆம் திகதிகளில் நடத்துமாறு வடமாகாண விளையாட்டுத் துறை அமைச்சு அறிவித்துள்ளது. (109)

## புனரமைக்கப்படுகின்றது

(ஈச்சமோட்டை)

யாழ்.ஈச்சமோட்டை கலட்டிப் புலம் ஞானவைரவர் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றது.

பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வரும் இந்த ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்தை விரைவாக நடத்தி வைபதற்கு ஆலய பரிபாலன சபையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் (25)

☆ ☆ ☆

(யாழ்நிருபர்)

போர்க்கால சூழலில் சேதமடைந்திருந்த அராலி வடக்கு "சில்வர் ஸ்ரார்ஸ்" விளையாட்டுக்கழக கலையரங்கத்தின் புனர்நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகின்றன.

சுமார் பத்து இலட்சரூபா செலவில் கட்டட வேலைகள் நடைபெற்று வருவதாக மேற்படி சங்கத் தலைவர் நாகஜெயக்குமார் தெரிவித்துள்ளார். (10)

## இயக்கச்சியில் உப அலுவலகம்

(பளை)

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் முள்ளிப்பற்று உபஅலுவலகம் இயக்கச்சி சந்திக்கு அண்மையில் பழைய சந்தை வளாகத்தினுள் புதிய கட்டடத்தில் இயங்கத தொடங்கியுள்ளது.

இத்துடன் மரக்கறி, மீன் சந்தைகளும் இறைச்சிக் கடையும பழைய இடங்களில் இயங்கி வருவதாகப் பிரதேசசபைச் செயலாளர் சி.சிவப்பிரகாசம் தெரிவித்தார். (70)



வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் இளைப்பாறிய அதிபர் சி.சுப்பிரமணியம் எழுதிய நவீன விஞ்ஞான முகாமைத்துவம் நூல் வெளியீட்டு விழாவில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி க.தேவராசா மங்கள விளக்கேற்றுவதையும், யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் ராஜரட்ணம் உரையாற்றுவதையும், கூட்டுறவு உதவி ஆணையாளர் நூலை வெளியிட்டு வைப்பதையும் அருகில் நூலாசிரியர் நிற்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படம்.பார்த்தீபன்)

# கூட்டுறவாளரிடம் இதய சுத்தியும் நேர்மையும் இருந்தால்தான் கூட்டுறவு வளர்ச்சி காணும்



(யாழ்ப்பாணம்)

நவீன விஞ்ஞான முகாமைத்துவம் என்ற இந்நூல் யாழ். மாவட்ட கூட்டுறவுத்துறையின் நவீனகால வளர்ச்சிப் போக்கிற்கு உறுதுணையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை என யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் இ.இராஜாராம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

போட்டிப் பொருளாதாரச் சூழலில் இந்த மாவட்டத்திற்கு இந்த நூல் பொருத்தமாக இருக்கும் என எண்ணுகின்றேன். மனிதன் வாழ்ந்து இறக்கும் வரை அவனது வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்ததாக முகாமைத்துவம் விளங்குகின்றது.

தொழிலாக இருந்தாலும் சரி, நாளாந்த அலுவல்களாக இருந்தாலும் சரி நவீன முகாமைத்துவத்தைப் பின்பற்றும் மனிதன் வாழ்க்கையில் வெற்றியீட்டிச் செல்கின்றான்.

கூட்டுறவாளர்கள் இந்நூலைத் தயவுசெய்து வாங்கிப்படிக்க வேண்டும். அதன்மூலம் கூட்டுறவாளர்களிடத்தில் காணப்படும் நேர முகாமைத்துவம் பற்றிய குறைபாட்டைத் தீர்க்க முடியும் எனக் குறிப்பிட்ட அவர் இதய சுத்தியும் நேர்மையும் கூட்டுறவாளர்களிடத்தில் இருந்தால் கூட்டுறவுத்துறை வளர்ச்சிகாணும் எனவும் இந்த வகையில் இந்நூல் வெளிவருவது முக்கியத்துவம் பெறுகின்றது எனவும் இந்நூலாசிரியர் கூட்டுறவுத்துறையிலிருந்து தாம் பெற்ற அனுபவங்களையெல்லாம் இந்நூலினூடாக எமக்குத் தந்துள்ளார் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது நூலாசிரியர் இ.சுப்பிரமணியம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

தொடர்ந்து இந்நூலின் வெளியீட்டுரையை பேராசிரியர் க.தேவராஜ் அவர்களும், மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் துறைத் தலைவர் இ.இரட்ணம் அவர்களும் நிகழ்த்தினர்.

இதன்போது யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபையினரால் நடாத்தப்பட்ட பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு சித்தி பெற்றவர்களுக்கான பயிற்சிச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (பா,70)

# காபற் மயமாகும் ஸ்ரான்லி வீதி

(நல்லூர்)

யாழ்.ஸ்ரான்லி வீதிக்கான காபற் போடும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. இராசாவின் தோட்டச் சந்தியில் இருந்து வின்சர் தியேட்டர் சந்தி வரைக்கும் இந்த காபற் போடும் பணிகள் இடம்பெற்றுள்ளது.

தொடர்ந்து ஓட்டுமடம் சந்தி வரைக்கும் காபற் வீதியாக மாற்றியமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த காபற் வீதியாக மாற்றுவதற்கான தார்க்கலவை பெருமளவில் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளது. (25)

# புத்தாண்டை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள்

(வவுனியா நிருபர்)

இளைஞர்களுக்கான நாளைய அமைப்பு, வவுனியா நகரசபை மைதானத்தில் மூன்று தினங்களுக்கு தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் விளையாட்டுப்போட்டியினையும் கலை நிகழ்ச்சிகளையும் நடத்த முன்வந்துள்ளது.

ஏப்ரல் 22 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நிகழ்வுகள் நடைபெறும் எனவும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் இந்தப் போட்டிகளில் பங்குகொள்ள அனுமதிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினரும், இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் தலைவருமான நாமல் ராஜபக்ஷ மற்றும் தென்னிலங்கை இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (39)

# காணி மோசடிகளில் ஈடுபட்ட நபர் மூன்றரை லட்ச ரூபாவுடன் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட உதயபுரம் பகுதியில் காணி மோசடிகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக் காணிமோசடிகளில் ஈடுபட்ட நபர் ஒருவர், மற்றொருவரிடம் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொண்டு தலைமறைவாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்காணி மோசடி தொடர்பாக நல்லூர் பிரதேச செயலரின் கவனத்திக்குக் கொணடு வந்து அவர் ஊடாக உரிய இடங்களுக்கு அறிவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டமைப்புகள் சிறந்த முறையில் இயங்கிவரும் இவ்வேளையில், இத்தகைய காணி மோசடிகளில் ஈடுபட்டு வரும் பரதேசத்தில் உள்ள கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தை மேலும் இயங்கவிடாது அதனைத்தடுக்கும் முயற்சியில் சமாசம் ஈடுபட்டுள்ளதாகவும் சமாசம் தெரிவிக்கப்படுகிறது. (21)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் கல்வி முகாமைத்துவம் மற்றும் மாணவர் கல்வி அபிவிருத்தி ஆகிய இரண்டு பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கு யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட மாகாண அரச சேவையைச் சேர்ந்த கல்வி நிர்வாக சேவை மற்றும் அதிபர் சேவை வகுப்பு ஒன்றைச் சேர்ந்த சேவை நீடிப்பில் இல்லாத உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை ஆசிரிய நிர்வாகக் கிளையில் பெற்றுப் பூரணப்படுத்தி எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

## ஆதினியின் இன்றைய பலன்

(11.03.2011 – வெள்ளிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி மாசி 27
இராகுகாலம் 10.53– 12.23,
சுபநேரம் 6.23 –7.53,
ஷஷ்டி பி.ப.12.25,
கார்த்திகை சித்தம் பி.ப.3.29.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:– மருத்துவச் செலவு, வீணான கற்பனை, மனத்துக்கம்.

ரிஷபம்:– முயற்சியில் தடை, பொருள் இழப்பு, உறவினர் விரோதம்.

மிதுனம் :– ஆலய வழிபாடு, பெரியோரை மதித்தல், எதிர்பாலார் உதவி.

கடகம்:– பெரியோர் ஆசி, மேலாளர் உதவி, மனைவியால் மகிழ்ச்சி.

சிம்மம்:– தொழில் விருத்தி, குடும்ப மகிழ்ச்சி, பணவரவு.

கன்னி :– தனச் சேர்க்கை, காரியச் சித்தி, பெரியோர் உதவி.

துலாம் :– மனமகிழ்வு, ஆன்மீக நினைவு, பிறர்க்குதவி.

விருச்சிகம்:– காரிய சித்தி, கற்பனை மிகுதி, மகிழ்வான செய்தி.

தனுசு:– பொறாமைப்படல், காரியத்தடை, வீணான கற்பனை.

மகரம்:– அலைதிப்போக்கு, காரிய சித்தி, நண்பர் சேர்க்கை.

கும்பம் :– நினைத்தது நடத்தல், நண்பர் உதவி, பயணத்தால் நன்மை.

மீனம்:– உதவிகள் செய்தல், தெய்வ சிந்தனை, காரிய சித்தி.

# தனியான பணிமனை

(பளை)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்துக்கென தனியானதொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு அண்மையில் இயங்கி வருகின்றது.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆரம்பிக்கப்பட்ட பின் இப்பிரதேசத்திலுள்ள கடைகள், சந்தைகள், வியாபாரத்தலங்கள், வீதிகள் ஆகியவற்றில் சுகாதாரம் நன்கு பேணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (70)

# அடிக்கல்நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கடந்தகால யுத்தத்தின்போது சேதமடைந்த பூநகரி மண்ணிதலையில் அமைந்துள்ள ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா எதிர்வரும் 13 ஆம் திகதி 12 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். ஆயர் இல்லப் பிரதிநிதி யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், பூநகரி உதவி அரசாங்க அதிபர், பூநகரி பிரதேச சபைச் செயலாளர், பூநகரி மண்ணித்தலை இராணுவ அதிகாரிகள், கிளிநொச்சி - முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை யாவிஸ், பூநகரி பங்குத்தந்தை பிறைன், பாசையூர் பங்குத்தந்தை றோய் பேடினன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (21)

# கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு

(கொட்டடி)

யாழ். நகரில் கட்டாக்காலியாகத் திரியும் நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

யாழ். மத்திய பஸ்தரிப்பு நிலைய வளாகம் மற்றும் முற்றவெளிப் பிரதேசம் போன்ற பகுதிகளில் இந்தக் கட்டாக்காலி நாய்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது.


இந்தக் கட்டாக்காலி நாய்களினால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் சிரமப்பட்டு வருவ தோடு இவற்றால் திடீர் விபத்துக்களும் நிகழ்வ தாகத் தெரிவிக்கப்படுகிறது. (25)

# இருளில் மூழ்கும் வீதிகள்

(பளை)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பளைப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள போதும் தெரு விளக்குகள் போடப்படாமையினால் வீதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

ஆகவே பளை பட்டினத்தை அண்டிய பகுதிகளில் முதற்கட்டமாக 20 தெரு மின்விளக்குகளை பச்சிலைப்பள்ளி பிரதேசசபை போடவிருப்பதர்க பிரதேச சபைச் செயலர் சி.சிவப்பிரகாசம் தெரிவித்தார். (70)



யாழ். அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு பாடசாலை மாணவத் தலைவரினால் வாழ்த்துமடல் அன்பளிப்புச் செய்யப்படுகிறது.

## ‘வடக்கின் பெரும் போர்’ முதல் நாள் ஆட்டம்

# பந்து வீச்சாளர்களுக்கு சொர்க்கபுரியானது




(யாழ்ப்பாணம்)

மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நேற்று ஆரம்பமான ‘வடக்கின் பெரும் போர்’ என வர்ணிக்கப்படும் மூன்று நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டியின் முதல்நாள் ஆட்டம் இருஅணி பந்து வீச்சாளர்களுக்கும் சொர்க்கபுரியாக அமைந்தது.

யாழ் மத்திய கல்லூரி அணிக்கும் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்குமிடையில் இடம்பெற்று வரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 105 ஆவது ‘வடக்கின் பெரும் போர்’ இனிங்ஸ் போட்டி நேற்று மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்சிற்காக களமிறங்கிய யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணி, 32.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஹரிவதனன் 20, அட்ரியன் 18, சஞ்சஜன் 17, பிரியதர்சன் 15, விதுஷன், சத்தி யேந்திரா ஆகியோர் தலா ஒன்பது ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அணித் தலைவர் ஜெரிக்துசாந் 21 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், கோகுலன் 68 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்சிற்காக களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி 15 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், முதல் மூன்று விக்கெட்டுக்களையும், பின்னர் 33 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஐந்து விக்கெட்டுக்களையும் இழந்து தடுமாறியது. இந்நிலையில் இணைந்த எட்வேட் எடின், கோகுலன் இணை மிகச் சிறப்பாக ஆடி அணியை நெருக்கடியிலிருந்து மீட்டனர். இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எட்வேட் எடின் ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 50 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் பில்சன் 18, கோகுலன் 13, வதுஷனன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹரிவதனன் 43 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் டக்சன் 13 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், விதுஷன் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.



(படங்கள் : சுரேஷ்)

13 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸை ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி, நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை, ஒரு விக்கெட்டை இழந்து 15 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. றஜிந்தன் எட்டு ஓட்டங்களுடனும், சத்தியேந்திரா ஓட்டம் பெறாமலும் களத்தில் உள்ளனர்.

நேற்றைய முதல் ஆட்டத்தின்போது 21 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

(எஸ், 44)

## சிறப்பாக அமைந்த பந்துவீச்சு

### சென் ஜோன்ஸ் கல்லூரி அணியின் தலைவர் விதுசன்

(யாழ்ப்பாணம்)

முதல் இனிங்ஸில் துடுப்பாட்டத்தில் சிறப்பான இணைப்பாட்டம் ஏற்படாத போதும் பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டனர் என்று சென் ஜோன்ஸ் கல்லூரி அணியின் தலைவர் ஆ. விதுசன் தெரிவித்தார்.

‘வடக்கின் பெரும் போர்’ என வர்ணிக்கப்படும் மூன்று நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டியின் முதல் நாள் ஆட்ட நிறைவின் பின்னர், எமது செய்தியாளருக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு விதுசன் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்பாராத விதமாக முதல் இனிங்ஸில் சிறப்பான இணைப்பாட்டம் எமக்கு ஏற்படவில்லை. இதுவே முதல் இனிங்சில் குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழக்க நேர்ந்தது. இருப்பினும் பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயற்பட்டனர். குறிப்பாக டக்சன் ஆரம்ப விக்கெட்டுக்களை வீழ்த்தினார். நாங்கள் ஒருங்கிணைந்து ஆடினோம். நல்ல



போட்டியை ஏற்படுத்தியிருந்தோம் இரண்டாவது இனிங்ஸில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம். இப்போட்டி மிகுந்த எதிர்பார்ப்பை ரசிகர்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்றது. மத்திய கல்லூரி வீரர் எட்வேட் எடினின் ஆட்டம் சிறப்பாக இருந்தது என்றார்.

(எஸ்)

## நெருக்கடியிலிருந்து மீண்டோம்

### யாழ்.மத்திய கல்லூரி அணியின் தலைவர் ஜெரிக்துசாந்

(யாழ்ப்பாணம்)

நெருக்கடியான நேரத்தில் எட்வேட் எடின், கோகுலன் ஆகியோரின் இணைப்பாட்டம் அணியை மீட்டுத் தந்தது மகிழ்ச்சி. முதல் இனிங்ஸில் நாங்கள் முன்னிலை பெற்றாலும், 50 முதல் 75 ஓட்டங்களை முதல் இனிங்ஸில் நாங்கள் எதிர்பார்த்தோம் என யாழ். மத்திய கல்லூரி அணியின் தலைவர் ஜெரிக் துசாந் தெரிவித்தார்.

‘வடக்கின் பெரும் போர்’ என வர்ணிக்கப்படும் மூன்று நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டியின் முதல் நாள் ஆட்ட நிறைவின் பின்னர், எமது செய்தியாளருக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு ஜெரிக் துசாந் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

33 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், ஐந்து விக்கெட்டுக்களை நாம் இழந்திருந்தோம். இருப்பினும் எட்வேட் எடின் மற்றும் கோகுலன் ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தில் மூலம் நல்ல நிலையை நாங்கள் பெற்றோம். இருப்பினும் இன்னும் 50 முதல் 75



ஓட்டங்களைப் பெற்றிருக்கவே விரும்பினோம். அது நடக்கவில்லை. இறுதி விக்கெட் இணையும் மிகச் சிறப்பாக செயற்பட்டதுடன், 13 ஓட்டங்கள் நாங்கள் மேலதிகமாகப் பெற உதவினர். பந்து வீச்சு சிறப்பாக இருந்தது. இந்த நிலையைத் தொடர்ந்து தக்கவைக்கப் போராடுவோம் என்றார்.

(எஸ்)

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2011

பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகளுக்கு எதிரான போட்டியை சமபலமுள்ள இரு அணிகளின் பரபரப்பான போட்டியாகத்தான் ரசிகர்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், பரபரப்புக்குக் குறைவில்லை. ஆனால் அது ஒரு பக்கப் பரபரப்பும், மறுபக்க பரிதாபமாகவும் முடிந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்தை ஒரு நியாயமான ஓட்ட எண்ணிக்கைக்குள் கட்டுப்படுத்த பாகிஸ்தானால் முடியவில்லை. இங்குதான் Catches Win The Matches என்ற பொன்வாக்கு நிதர்சனமாகிறது. அன்றைய கதாநாயகன் றொஸ் ரெய்லர் விசுவரூபம் எடுக்கக் காரணமாக அமைந்து விடப்பட்ட பிடிகள் ஒன்றா? இரண்டா? அல்லது மூன்றா? எத்தனை தரம்தான் பொறுப்பார் றொஸ் ரெய்லர். அதுவும் அவரின் பிறந்த தினமல்லவா. ஒரே ஓவரில் இரண்டு சந்தர்ப்பங்கள். அக்தரின் பந்து வீச்சில் ஒரு பந்து சிலிப்புக்குள்ளால் பறக்கிறது. யூனிஸ்கானும், கம்ரன் அக்மலும் அது உனக்கா? எனக்கா? என்று தீர்மானிக்க முடியாமல் நிற்கிறார்கள். அதே ஓவரில் இன்னொரு பந்து நேராகக் கம்ரன் அக்மலின் கைகளுக்குள்ளேயே சென்று விழுகிறது. அந்தப் பிடியை எப்படித்தான் கம்ரன் அக்மல் தவறவிட்டார் என்பதை அவரிடம்தான் கேட்கவேண்டும். இந்த இரண்டு பிடிகளில் ஒன்றாவது எடுக்கப்பட்டிருந்தால் ரெய்லர் வந்தோம் போனோம் என்று திரும்பிச் சென்றிருப்பார். ஆனால், அவரது அதிர்ஸ்டம் அது. அதன் பின் நடந்ததெல்லாம் றொஸ் ரெய்லரின் கிரிக்கெட் வாழ்க்கையில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய விடயங்கள். இறுதிக் கட்ட ஓவர்களில் அக்தருக்கு ரெய்லர் கொடுத்த தண்டனை மிகப் பெரிது. 47ஆவது ஓவரில் அக்தரின் பந்து வீச்சில் இரண்டு பவுண்டரிகளையும் மூன்று சிக்ஸர்களையும் விளாசி இருபத்தெட்டு ஓட்டங்களைக் குவித்தார். அதன் பின் வந்த அப்துல் ரசாகின் (49ஆவது) ஓவரில் மீண்டும் இரண்டு பவுண்டரிகளும் மூன்று சிக்சர்களும் அடிக்க, அந்த ஓவரில் பெற்ற ஓட்டங்கள் 30. இப்படியாக றொஸ் ரெய்லர் 117 பந்துகளில் 131 ஓட்டங்களை ஆட்டமிழக்காது எடுத்துத் தனது 27ஆவது பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடினார்.

250இற்குள் அடக்குவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட நியூசிலாந்து முன்னூறைக் கடந்தது என்றால், அந்த இறுதி ஐந்து ஓவர்கள்தான். ஐந்து ஓவர்களில் நூறு ஓட்டங்கள் என்பது சாதாரணமாக எடுக்கலாம் என்று எண்ணிவிட முடியாது. ஆனால் அதனை நிதர்சனமாக்கிக் காட்டினார்கள் றொஸ் ரெயிலரும் ஸ்கொட் டைரிசும்.

முன்னதாகவே ரெயிலரின் பிடிகளை எடுக்காமல் விட்டது பாரிய தவறென்றால் இறுதி ஓவர்களில் அக்தரும், ரசாக்கும் ரன்களைக் கொடுத்தது பந்து வீச்சாளர்களின் தவறு.

நிச்சயமாக கூறக்கூடிய வகையில் Full Toss களை போட்டுக் கொடுத்ததே ரன் அசுரவேகத்தில் ஏறக் காரணம். துடுப்பாட்ட வீரரைக் கட்டுப்படுத்த எத்தனையோ வழிமுறைகள் இருக்கையில், இவர்கள் இருவரும் இவ்வளவு மோசமாகப் பந்து வீசி இருக்கக் கூடாது. இதுவே தோல்விக்கான இன்னொரு காரணமாகவும் அமைந்துவிட்டது.

அடுத்த ஆட்டத்தில் கம்ரன் அக்மல் விக்கெட் கீப்பராகக் கடமையாற்றமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல அக்தருக்கும் ஓய்வுகொடுத்து வஷாப் றியாஸ் உள்வாங்கப்படவேண்டும். அது பாகிஸ்தானின் அடுத்த ஆட்டத்திற்கு உதவியாக இருக்கும். வெறும் வேகம் இருப்பதால் மட்டும் சாதிக்க முடியுமென்பதில்லை. விவேகத்துடன் கூடிய வேகமே வெற்றிக்கு வழிசமைக்கும். யோசிக்குமா பாகிஸ்தான்?

**ஜோசப் கிருஷ்ணா**

### தினமொரு தகவல்

ICC Cricket World Cup 2011

### தினமுரசு குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.

1) மார்ச் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான போட்டியில் வெல்லப்போகும் அணி எது?

2) இப்போட்டியிள் ஆட்டநாயகனாகும் வீரர் யார்?

பெயர்: ..................................

முகவரி : ..................................

போ.இல : ..................................

விடைகள் : 01) ..................................

02) ..................................

**போட்டி இல: 22**

தினமொரு பரிசுப் போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் விரைவில் அறிவிக்கப்படும்

உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

தினமுரசு காரியாலயம்
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தினமுரசு விளம்பரப்பணிமனை
M.P.C.S. கட்டடம்
127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

விடைகளை 12 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.

# சிறந்த அனுபவம் ஏற்பட்டது



(புதுடில்லி)

நெதர்லாந்து அணிக்கெதிரான போட்டியில் நடுவரிசை ஓவரில் எங்களுக்கு நெருக்கடி ஏற்பட்டது. ஒட்டு மொத்தத்தில் சிறந்த அனுபவம் ஏற்பட்டது . இவ்வாறு இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்தார்.


இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களது பந்து வீச்சாளர்கள் அனைவரும் மனவலிமையுடன் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். பியூஸ் சாவ்லா மிகுந்த நெருக்கடியில் இருந்தார். இங்கிலாந்துக்கு எதிராக அவர் விக்கெட்டுகளைக் கைப்பற்ற முடியாமல் போனதால் ரசிகர்களால் கடும் விமர்சனத்துக்கு உள்ளானார். மன ரீதியாக அவர் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்பதற்காக அவருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு ஏன் கொடுக்கக்கூடாது என்ற காரணத்தால் கொடுக்கப்பட்டது.

அவருக்கு முக்கியமான இந்த ஆட்டத்தில் நன்றாக பந்து வீசினார். அவரைத் தேர்வு செய்தது சரிதான். ஒட்டு மொத்தத்தில் சாவ்லாவால் நான் முழு மகிழ்ச்சி அடைந்து உள்ளேன். இந்த வெற்றி மிகவும் முக்கியமானது. இது ஒரு மோசமான வெற்றி இல்லை. அதே நேரத்தில் சிறந்த வெற்றி என்று கருத முடியாது. நடுவரிசை ஓவரில் எங்களுக்கு நெருக்கடி ஏற்பட்டது. ஒட்டு மொத்தத்தில் சிறந்த அனுபவம் ஏற்பட்டது. நாக் அவுட் சுற்று முக்கியமானது. ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் அடைந்து செல்வது முக்கியமானது. யூசுப்பதான் ஒரு அதிரடி துடுப்பாட்ட வீரர். அவர் நீண்ட நேரம் களத்தில் நின்று ஆட வேண்டும் என்று நினைத்து, முன்னதாக களம் இறக்கினோம். ஆனால் ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் இருந்தது என்றார்.

# ஐ.சி.சி. மீது அதிருப்தி

(கொழும்பு)



உலகக்கிண்ணப் போட்டி - 2011 அட்டவணை தொடர்பில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க கண்டனம் வெளியிட்டுள்ளார்.

நொக் - அவுட் போட்டிகள் இந்தியா மற்றும் பங்களாதேஷில் நடைபெறவுள்ளதால், இலங்கையணியினர் அவர்களது நொக் - அவுட் போட்டியின்போது தமது தாய்நாட்டின் ஆதரவினைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பற்றுப் போவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போட்டி விதிமுறைப்படி இந்தியா, பங்களாதேஷ் மற்றும் இலங்கையில் உலகக்கிண்ணப் போட்டி நடாத்தபடும் போது, குறித்த நாடுகள் நொக் - அவுட் போட்டிகளுக்குத் தெரிவாகும் போது அப்போட்டி அவர்களது தாய் நாட்டில் நடைபெற வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் இலங்கையைவிடுத்து ஏனைய இரு நாடுகளுக்கும் அந்த வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியா எதைக் கேட்டாலும் அதற்கேற்ப ஐ.சி.சி சாய்ந்து விடுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்நிலையில் அரையிறுதிப் போட்டி இலங்கை மற்றும் இந்தியா அணிக்களுக்கிடையில் நடைபெறுமாக இருந்தால், ஏன் அது கொழும்பில் நடைபெறக்கூடாது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன், இலங்கை அணியினரின் போட்டியினைக் காண மக்கள் பாரிய ஆர்வத்துடன் இருப்பதாகவும், ஐ.சி.சியின் போட்டி அட்டவணைக்கு இலங்கை கிரிக்கெட் எதிர்ப்பினைத் தெரிவிக்காமை கவலையளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ICC Cricket World Cup 2011

## இன்றைய ஆட்டம்

**மேற்கிந்தியத்தீவு எதிர் அயர்லாந்து**
மைதானம் மொகாலி: பகல் ஆட்டம்

**இங்கிலாந்து எதிர் பங்களாதேஷ்**
மைதானம் டாக்கா: பகலிரவு ஆட்டம்

# அக்மல் வாய்ப்பு நீடிப்பு



அடுத்து வரும் ஆட்டங்களில் விக்கெட் கீப்பர் கம்ரான் அக்மல் நீக்கப்படமாட்டார் என அந்த அணியின் பயிற்சியாளர் வக்கார் யூனிஸ் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் அந்த அணியின் ரொஸ் டெய்லர் கொடுத்த இரு பிடிகளைக் கோட்டைவிட்டார் கம்ரான் அக்மல். இதனால் பாகிஸ்தான் படுதோல்வியைச் சந்தித்தது. இதனால் அக்மல் மீது பாகிஸ்தான் ரசிகர்கள் கடும் கோபத்தில் உள்ள நிலையில், சிம்பாப்வேக்கு எதிரான ஆட்டத்தில் அவர் விளையாடுவாரா என்ற கேள்வியெழுந்தது. இந்த நிலையில் அக்மல் விளையாடுவார் என்பதை வக்கார்யூனிஸ் உறுதி செய்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: அக்மல் பிரச்சினையைப் பெரிதுபடுத்துவதற்கு இது நேரமில்லை என்று கருதுகிறேன். அவர் சரியாக விளையாடவில்லை என்பது உண்மைதான். கிரிக்கெட்டில் இதுபோன்று நடப்பது சகஜம் தான். அக்மலுக்கு அந்த நாள் மிகவும் மோசமானது என்றார். அடுத்த ஆட்டத்தில் அக்மல் நீக்கப்படுவாரா என்று கேட்டதற்கு, உலகக் கிண்ணப் போட்டித் தொடரிற்குப் பின்னர் அதுபற்றி சிந்திக்கலாம். இப்போது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் மத்தியில் அவரை மாற்றுவது பற்றி சிந்திக்க முடியாது என்று தெரிவித்தார்.

## இலங்கை வெற்றி

(பல்லேகல)

சிம்பாப்வே அணிக்கெதிரான போட்டியில் இலங்கை அணி 139 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் 26ஆவது போட்டி நேற்று பல்லேகல மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது. முதலில் ஆடிய இலங்கை அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 327 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய சிம்பாப்வே அணி, 39 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. போட்டியின் ஆட்டநாயகனாக டில்சான் தெரிவானார்.



## தினமுரசு இலங்கை எதிர் சிம்பாப்வே SCORE CARD

மைதானம் : பல்லேகல — திகதி : 10-03-2011

ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி சிம்பாப்வே : முதலில் களத்தடுப்பு.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) தரங்க | c சிக்கும்புறா b மொபு | 133 |
| 02) எம். டில்சான் | c பன்யங்கரா b உட்சேயா | 144 |
| 03) பெரேரா | c சிக்கும்புறா b பிறைஸ் | 03 |
| 04) மஹேல ஜெயவர்த்தன | c சிக்கும்புறா b மொபு | 09 |
| 05) சங்கக்கார | not out | 11 |
| 06) மத்தியூஸ் | c சிக்கும்புறா b மொபு | 00 |
| 07) சாமர சில்வா | c பன்யங்கரா b மொபு | 04 |
| 08) சமரவீர | not out | 08 |
| 09) குலசேகர | | |
| 10) லசித் மலிங்க | | |
| 11) எம். முரளிதரன் | | |
| உதிரிகள் | (b2, lb 3, w 9, nb1) | 15 |
| மொத்தம் | (6 W :50 ஓவர்கள்) | 327 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) எம். ரெய்லர் | c மஹேல b மத்தியூஸ் | 80 |
| 02) ஆர். சகப்வா | b முரளிதரன் | 35 |
| 03) ரீ. தைபு | c சங்கக்கார b மத்தியூஸ் | 04 |
| 04) உட்சேயா | c சங்கக்கார b டில்சான் | 04 |
| 05) சீ. எர்வின் | lbw b டில்சான் | 17 |
| 06) இ. சிக்கும்புறா | c பெரேரா b முரளிதரன் | 06 |
| 07) ஜீ. லாம்ப் | c மஹேல b டில்சான் | 00 |
| 08) ஜீ. கிறீமர் | not out | 14 |
| 09) ஆர். பிறைஸ் | c சமரவீர b பெரேரா | 11 |
| 10) ரீ. பன்யங்கரா | lbw b டில்சான் | 00 |
| 11) சீ. மோபு | b முரளிதரன் | 01 |
| உதிரிகள் | ( b2, 1b 2, w12) | 16 |
| மொத்தம் | (all out; 39 ஓவர்கள் ) | 188 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| பி. மொபு | 07 | 62 | 04 |
| பன்யங்கார | 06 | 51 | 00 |
| பிறைஸ் | 09 | 46 | 01 |
| சிக்கும்புறா | 03 | 20 | 00 |
| உட்சேயா | 10 | 50 | 01 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| லசித் மலிங்க | 08 | 51 | 00 |
| சீ. பெரேரா | 06 | 33 | 01 |
| எம். முரளிதரன் | 09 | 34 | 03 |
| மத்தியூஸ் | 05 | 29 | 02 |
| எம். டில்சான் | 03 | 04 | 04 |

**139 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றி. ஆட்டநாயகன் : எம். டில்சான்**

அனுசரணையாளர்: நேரடியாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கட்டடப் பொருட்களுக்கும் தேவையான அனைத்து இயந்திர வகைகள் மற்றும் நிறுத்தல் தராசு வகைகள் அனைத்து மாபிள் கொமட் வகைகள் எல்லாவற்றையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள ஒரே இடம்

ஸ்ரார் செரமிக்ஸ்

NO. 05, Stanley Road,
Jaffna.

T.P: 021 5672061,
Mobile: 0772510994, 0777578277 .
Email: vimalraja 43@yhoo.com.

ICC Cricket World Cup 2011

(C/483)

# தொகுதிப் பங்கீட்டில் சிக்கல் எனக்கூறி நாடகம் நடத்திய தி.மு.க - காங்கிரஸ்



தி.மு.க. - காங்கிரசுக்கு இடையே கடந்த சில நாட்களாக நடந்த சம்பவங்கள் ஊடகங்களுக்கும், தி.மு.க. மற்றும் காங்கிரஸ் தொண்டர்களுக்கும் வியப்பை அளித்து இருக்கலாம். ஆனால் இவையெல்லாம் வெறும் நாடகங்கள் என அ.தி. மு.க.பொதுச் செயலாளர் ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையில், தெரிவிககப் பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தொகுதி எண்ணிக்கை தொடர்பான காங்கிரஸ் கோரிக்கை குறித்து தி.மு.க. தலைவர் கருணாநிதி தனது அதிருப்தியைத் தெரிவித்தார். பின்னர், மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசிலிருந்து தனது கட்சி அமைச்சர்கள் விலகிக் கொளவதாக மிரட்டினார்.

ராஜிநாமாக் கடிதங்களைக் கொடுக்கப் போகிறோம் என்ற நாடகத்தினை முன்னிறுத்தி, தி.மு.க. மத்திய அமைச்சர்கள் விமானம் மூலம் டெல்லி புறப்பட்டனர். ஆனால், ராஜிநாமாக் கடிதங்கள் அவர்களுடைய சட்டைப் பைகளிலிருந்து வெளிவரவில்லை. இதற்குப் பதிலாக மீண்டும் இணைந்து செயற்படுவதற்கான திட்டம் தயாரிக்கப் பட்டது. ஊடகங்களும், மக்களும் ஒரு முழு வாரத்திற்கு ஸ்பெக்ட்ரம் புலன் விசாரணையை மறக்கும் நிலைக்கு இந்த நடவடிக்கை தள்ளுவதாக அமைநது விட்டது.

இது மட்டுமல்லாமல், விலைவாசி மற்றும் எண்ணிலடங்கா இதர பிரச்சினைகளை மறக்கும் நிலைக்கும் அவர்கள் தள்ளப்பட்டுவிட்டார்கள்.

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட போதும், காவிரியில் தமிழ நாட்டிற்கு உரிய பங்கினை கர்நாடகா தர மறுத்தபோதும், முல்லைப் பெரியாறில் உச்ச நீதிமன்ற ஆணையை செயற்படுத்த கேரளா மறுத்தபோதும், அனைத்துப் பொருட்களின் விலைகள் உயர்வதற்கு வழி வகுக்கின்ற பெட்ரோலியப் பொருட்களின் விலைகளை மத்திய அரசு திரும்பத் திரும்ப உயர்த்தியபோதும்,

தமிழக மீனவர்கள் நடுக்கடலில் படுகொலை செய்யப்பட்ட போதும், வறுமையில் சிக்கி விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப் பட்டபோதும், மத்திய அரசிலிருந்து விலகப் போகிறோம் என்று மத்திய அரசை கருணாநிதி மிரட்டவில்லை. வழக்கம் போல, பாரதப் பிரதமருக்குக் கடிதங்களை மட்டும் அனுப்பினார்.

காங்கிரஸ் கூட்டணியில் தி.மு.க. அங்கம் வகிப்பது காங்கிரசுக்கு மிகப் பெரிய சங்கடம் ஆகும். இந்த அளவுக்கு காங்கிரசுக்கும், காங்கிரஸ் தலைமைக்கும் தர்மசங்கடத்தை ஏற்படுத்திய இவர்களுக்கு வீடு, வீடாகச் சென்று வாக்குச் சேகரிக்க வேண்டியவர்கள் இந்த மாநிலத்தில் உள்ள பாவப்பட்ட காங்கிரஸ் தொண்டர்களே. இந்தக் கபடநாடகங்களை எல்லாம் தமிழக மக்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்து விட்டார்கள்.எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்டணி நலன் கருதியே ஒருதொகுதி விட்டுக்கொடுப்பு

## என்கிறார் ராமதாஸ்

(சென்னை)

கூட்டணியின் நலன் கருதி நாங்கள் ஒரு தொகுதியை விட்டுக் கொடுத்தோம் என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்தார். இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் ராமதாஸ் கூறியதாவது -

தி.மு.க. கூட்டணியில் எங்கள் கட்சிக்கு 31 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. கிடைத்த தொகுதியை எந்தக் கட்சியும் விட்டுக் கொடுத்தது என்பது இதுவரை நடந்த தில்லை.

எனினும், எங்கள் கூட்டணியில் காங்கிரஸ் கட்சியும் இடம்பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்துக்காக பா.ம.க.வுக்கு தரப்பட்ட தொகுதிகளில் ஒன்றை விட்டுக் கொடுத்துள்ளோம்.

பா.ம.க.வுக்கு எந்தெந்தத் தொகுதிகள் என்பது பற்றி ஓரிரு நாளில் முடிவு செய்யப்படும். எங்கள் கூட்டணி மாபெரும் வெற்றி பெறும் என்றார் ராமதாஸ்.

# போட்டியிடும் தொகுதிகள் குறித்தும் தி.மு.க.- காங்கிரஸ் பலப்பரீட்சை



(சென்னை)

தி.மு.க., கூட்டணியில் தொகுதிப் பங்கீடு முடிந்துவிட்ட நிலையில், கூட்டணிக் கட்சிகள் எந்தெந்தத் தொகுதிகளில் போட் டியிடுவது என்பதை முடிவு செய்யும் அடுத்த கட்ட பலப்பரீட்சை ஆரம்பமாகியுள்ளது. குறிப்பிட்ட சில தொகுதிகளை காங்கிரசும், தி.மு.க.வும் விரும்புவதால் நெருக்கடி உருவாகியுள்ளது.

காங்கிரசுடன் தொகுதிப் பங்கீட்டில் ஏற்பட்ட காலதாமதத்தைப் போல், தொகுதிகளை ஒதுக்குவதிலும் தாமதம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதல், தி.மு.க., கவனமாக இருக்கிறது. இதற்காக, காங்கிரஸ் போட்டியிட விரும்பும் தொகுதிகளை பரிசீலித்து அதை முடிவு செய்வதில் தி.மு.க., தீவிரமாக உள்ளது. கடந்த சட்டசபைத் தேர்தலில் வெற்றிபெற்ற தொகுதிகளை இம்முறையும் அக்கட்சிக்கு ஒதுக்கிவிட்டு, கூடுதல் தொகுதிகளுக்கு, அடுத்த முக்கியத்துவம் அளிக்க உள்ளனர். தேர்தல் கமிஷனின் தொகுதி சீரமைப்பினால், சில தொகுதிகள் நீக்கப்பட்டுள்ளன.

சில புதிய தொகுதிகள் உருவாகியுள்ளன. இதனால், பாரம்பரியமாக இருந்த தொகுதிகளும், சில வி.ஐ.பி., தொகுதிகளும் விடுபட்டுள்ளன. இவற்றுக்கு மாற்றுத் தொகுதிகள் தேடுவதிலும் தொகுதி பங்கீட்டுக் குழுவினர் தனிக் கவனம் செலுத்துகின்றனர்.

தனித் தொகுதிகளை பிற கட்சிகளுக்குத் தள்ளிவிட்டு, பொதுத் தொகுதிகளைத் தக்க வைத்துக் கொள்வதில் பல கட்சிகள் உஷாராக உள்ளன. ஆனால், ஒதுக்கப்பட்டுள்ள தொகுதிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பொதுத் தொகுதிகள் மற்றும் தனித் தொகுதிகளின் விகிதாசாரம் இருக்கும் என்று தெரிகிறது

# தேசப் பாதுகாப்பை கருத்திலெடுக்காமல் ஸ்பெக்ட்ரம் அலைவரிசையை வழங்கலாமா?

## கேள்வியெழுப்பும் உயர் நீதிமன்றம்

வெளிநாட்டில் இருந்து அளவுக்கு அதிகமாக அன்னிய முதலீடு வந்தால் தேச பாதுகாப்பைக் கருத்தில் கொள்ளாமல் ஸ்பெகட்ரம் அலைவரிசையை வழங்கலாமா? என உயர் நீதிமன்று கேள்வி எழுப்பியுள்ளது. இது தொடர்பாக சுப்பிரமணிய சுவாமி கொடுத்த வழக்கில் உயர் நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்துள்ளதாவது -அரபு நாட்டை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் எடிசலாட் மற்றும் எயார்டெல் நிறுவனங்கள் மீது தேச பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாக உள்துறை அமைச்சகம் எச்சரித்துள்ளது.

இந்த நிறுவனங்களிடம் இருந்து தொலைத்தொடர்புத் துறையில் அந்நிய, நேரடி முதலீட்டைப் பெற நிதி அமைச்சகமும், தொலைத் தொடர்பு அமைச்சகமும் முயற்சித்த போது, அநநிய நேரடி முதலீடு ஊக்குவிப்பு வாரியமும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. அந்த நிறுவனங்களால் உள்நாடு மறறும் வெளிநாடு அளவில் தேசப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்பதை மிகத் தீவிரமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அவ்வாறு செய்யாமல் அந்த எச்சரிக்கை உதாசீனப்படுத்தப்பட்டு இருப்பது உண்மை என்றால், தேசத்தின் பாதுகாப்பு விஷயத்தில் சமரசம் செய்யப்பட்டிருக்கிறது என்றே அர்த்தமாகிறது.




ஆனால், நாட்டின் ராணுவ நடவடிக்கைகளையே, இந்த நிறுவனங்கள் தங்களுடைய தொலைத் தொடர்பு சேவை மூலமாக அறிந்து கொள்ள முடியும் என்பதை கூட ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு செய்யும்போது கவனத்தில் கொள்ளாதது ஏன்? என்று கேள்வி எழுப்பியுள்ளது உயர்நீதிமன்றம்.

## வெள்ளி விருந்து

## பகுத்தறிவைப் பாவிப்போம்

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்கிறார் ஔவையார். இந்த மனிதப் பிறவி எடுத்திருக்கும் நாங்கள் ஒவ்வொருவரும் பூர்வஜென்ம புண்ணியஞ் செய்தவர்களாவோம். ஆறாம் அறிவாகிய பகுத்தறிவு இருந்தும் நாம் இப்போது மனிதர்களாக வாழ்கின்றோமா? சிந்திக்கவேண்டிய விடயம்.

நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் ஆண்டவன் பார்த்துக் கொண்டுதான் இருப்பார். நாங்கள் செய்யக்கூடாத பாவங்களையெல்லாம் செய்துவிட்டுக் கடவுளிடம் மன்னிப்புக் கேட்பதால் ஆகப் போவது ஒன்றுமில்லை.

'இது நன்மை பயப்பது, இது தீமை பயப்பது' என்று பிரித்துப் பாக்க முடியாத மனித இனத்தை எப்படி உயர்திணையில் சேர்ப்பது? ஓ! மனிதா!! கொஞ்சம் சிந்தித்துப்பார். மனிதனாகப் பிறந்துள்ள நீ ஏன் மிருகம்போல வாழ்கின்றாய்? கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை ஏன் மறந்து விடுகின்றாய்?

இவ்வளவு காலமும் போனது போகட்டும். இனியாவது மனிதனாக வாழ நம்மை நாமே பழக்கப்படுத்த வேண்டும். இது வருவதற்கு என்ன செய்ய வேண்டும்? மனச்சாட்சிப்படி நடக்கப்பழக வேண்டும். மனச்சாட்சிக்கு விரோதமாக வாழக்கூடாது.

நாமும் வாழ்ந்து மற்றவர்களும் வாழவேண்டும் என்ற நினைப்பு வரவேண்டும். எல்லாமே நான்தான். நானின்றி எதுவும் நடைபெறாது என்ற முனைப்பு முற்றாக நீங்க வேண்டும்.

ஆகவே, உண்மைக்குப் புறம்பாக வாழாமல் நேர்மை, நீதி, நியாயம், தியாகம், அன்பு, பாசம் மிக்கவர்களாக நாம் வாழத் தொடங்கவேண்டும். பிறருடைய குற்றங்களைப் பார்த்துக் குறைசொல்லிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு நாங்கள் நல்லவர்களாக வாழ உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

இதுவே நமக்கும் நாட்டுக்கும் நன்மை பயக்கும்.

சிவநெறிக்கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

# ஜெயலலிதா, விஜயகாந்த், விஜய் மூவரையும் ஒரே மேடையில் அமர வைப்பதற்கு முயற்சி



அ.தி.மு.கவின் தீவிர ஆதரவாளராக மாறிவிட்ட இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகர் இபபோது தனது மகன் விஜய்யையும், அ.தி.மு.க பொதுச்செயலாளர் ஜெயலலிதாவையும் ஒரே மேடையில் அமரவைக்க ஏற்பாடு செய்துள்ளார்.

தான் இயக்கிவரும் சட்டப்படி குற்றம் படம் முடியும் தருவாயில் இருப்பதால் இப்படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழாவை மிகப் பிரமாண்டமாக நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

இந்த விழாவில் கலந்து கொண்டு பாடல் கசட்டை வெளியிடுமாறு ஜெயலலிதாவைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்படம் ஆளும்கட்சிக்கு எதிரான பல விவகாரங்களைத் தாங்கி வருவதாலும், தேர்தல் நேரம் என்பதாலும் ஜெயலலிதா இதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளாராம்.

ஜெயலலிதா வெளியிட நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தே.மு.தி.க தலைவர் விஜயகாந்தையும் கேட்டுக்கொண்டுள்ளாராம்.

இந்த விழாவிற்கு தமிழகம் முழுவதிலும் உள்ள விஜய் ரசிகர்களை மட்டுமல்லாது புதுச்சேரி, கேரளா உட்பட பிற மாநிலங்களிலும் உள்ள விஜய் ரசிகர்களைத் திரட்டத் திட்டமிட்டுள்ளார் எஸ்.ஏ.சந்திரசேகர்.

மேலும், அதிமுக கூட்டணிக் கட்சித் தொண்டர்களையும் திரட்டி மாநாடு போல் நடத்த அவர் திட்டமிட்டுள்ளார்.

இது தேர்தல் பிரசார மாநாடாக அமையும் என்பதால் ஜெயலலிதாவும் இந்த விழா மீது தனிக்கவனம் வைத்திருக்கிறாராம்.

# ஐ.நா செயலருடனான இரகசிய சந்திப்பு சந்தேகம் கிளப்பும் இன்னர் சிற்றி பிரஸ்

**Inner City Press**

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கும் இடையே கடந்த பெப்ரவரி 23ஆம் திகதி இரகசியச் சந்திப்பு நடைபெற்ற போது ஐ.நாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவரும், நல்லிணக்க ஆணைக்குழுவின் உறுப்பினருமான எச்.எம்.ஜி.எஸ் பலிஹகார நியுயோர்க்கில் இருந்துள்ளதாகவும் அவர் என்ன காரணத்துக்காக அங்கு இருந்தார் என்பது தெளிவாகவில்லை என்றும் இன்னர் சிற்றி பிரஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை இந்த இரகசியச் சந்திப்புத் தொடர்பாக இலங்கையின் சண்டே ரைம்ஸ் மார்ச் 6ஆம் திகதி தகவல் வெளியிட்டதோடு இச்சந்திப்பை அடுத்து பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவின் கால எல்லை மேலும் இரண்டு மூன்று வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தது.

உடனடியாகவே சண்டே ரைம்சில் வெளியான இத்தகவலையும் இணைத்து பின்வரும் கேள்விகளை ஐ.நா பொதுச்செயலாளரின் பேச்சாளர் மார்ட்டின் நேஸ்ர்க்கி மற்றும் பிரதி பதில் பேச்சாளர் பர்ஹான் ஹக் ஆகியோருக்கு மார்ச் 6ஆம் திகதி காலையில் அனுப்பியிருந்தது இன்னர் சிற்றி பிரஸ்.

பான் கீ மூன் நியமித்த ஐ.நா நிபுணர் குழுவை இலங்கை அரசின் பிரதிநிதிகள் இருவர் சந்தித்தது உண்மையா பொய்யா? உண்மையாயின் அது ஏன் மறைக்கப்பட்டது? இது பான் கீ மூன் நியமித்த நிபுணர்கள் குழு இலங்கைக்குச் செல்வதற்குப் பதிலீடானதா? ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நெகிழ்வுத்தன்மை தான் இது என்று பான் கீ மூன் மீளவும் சொல்வாரா?

மார்ச் முதலாம் திகதி முடிவடைய இருந்த நிபுணர் குழுவின் பதவிக்காலம் மேலும் இரண்டோ மூன்று வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா பொய்யா? அவ்வாறு நீடிக்கப்பட்டிருக்கு மானால் அது பகிரங்கப்படுத்தப்படாதது ஏன்? தவிரவும் அதன் பதவிக்காலம் என்ன காரணத்திற்காக நீடிக்கப்பட்டிருக்கிறது.

ஆம் அல்லது இல்லை என்று பதிலளியுங்கள். நிபுணர் குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்படுமா இல்லையா?

பான் கீ மூனுடனான சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் அனைவரதும் பெயர்ப்பட்டியலையும் அந்தச் சந்திப்புத் தொடர்பான அறிக்கையையும் தருவீர்களா?

இந்தக் கேள்விகளுக்கு ஐ.நா பொதுச்செயலாளரின் பேச்சாளர் மார்ட்டின் நேஸ்ர்க்கியோ மற்றும் பிரதி பதில் பேச்சாளர் பர்ஹான் ஹக்கோ பதிலளிக்கவில்லை, குறைந்தபட்சம் வழமைபோல இந்தக் கேள்விகள் கிடைத்தன என்பதை உறுதிப்படுத்தக் கூட இல்லை.

இந்தக் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டு 24 மணித்தியாலங்களின் பின்னர் மார்ச் 7ஆம் திகதி மதியம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மீளவும் இன்னர் சிற்றி பிரஸ் நேர்ஸ்கியிடம் இதே கேள்விகளை எழுப்பியது. அத்தோடு இலங்கைப் பத்திரிகையின் அறிக்கையிடல் குறித்த தங்களுடைய எதிர்வினை என்ன என்றும் பான் கீ மூன் திரும்பத் திரும்பக் கூறுகிறபடி அவருடைய நிபுணர் குழு இலங்கைக்கு விஜயம் செய்யுமா என்றும் கேட்டது.

இவற்றுக்குப் பதிலளித்த மார்ட்டின் நேர்ஸ்கி இலங்கைப் பத்திரிகையின் அறிக்கை ஒரு குழப்பகரமான அறிக்கை என்று தெரிவித்ததோடு, இன்னர் சிற்றிபிரஸை நோக்கி அழுத்திச் சொன்னார். அதனை நீங்களே படம் எடுத்துள்ளீர்கள். அதுவல்ல பிரச்சினை என்று தெரிவித்துள்ளார்.

பான் கீ மூனின் நிபுணர் குழுவினர் தற்போது எங்கே என்று இன்னர் சிற்றி பிரஸ் கேட்டதற்கு நேர்ஸ்கி பதிலளிக்கவில்லை. அவர்கள் தான் சொல்ல வேண்டும் என்றுதெரிவித்தார். நிபுணர் குழுவின் கால எல்லை இந்த மாதத்துடன் முடிவடைகிறது என்றும் அவர் தெரிவித்தார். அது பகிரங்கப்படுத்தப்படுமா என்று இன்னர் சிற்றி பிரஸ் கேட்டபோது, அது நிபுணர் குழுவைப் பொறுத்த விடயம். செயலாளர் நாயகம் பான் கீ மூனுடன் கலந்தாலோசித்து விட்டு அது பற்றி முடிவு செய்யப்படும் என்றும் நேர்ஸ்கி தெரிவித்தார்.

## இன்று சந்திப்பு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் குறித்து தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மற்றும் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பொன்று நாளை இடம்பெறவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

ராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளைச் சந்திக்கும் இறுதிச் சந்தர்ப்பம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

## அடுத்த வருடத் தொடக்கத்திலிருந்து தகவல் தொழில்நுட்பக் கல்வி அறிமுகம்



(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் தகவல் தொழில்நுட்பப் பாடம் ஆறாம் வகுப்பிலிருந்து பாடசாலை கலைத்திட்டத்தில் சேர்க்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

"தகவல் தொழில்நுட்பம் ஆங்கிலம், விளையாட்டு, கணிதம்,பிறநாட்டு மொழி மற்றும் கவின்கலைகள் ஆகிய பாடங்கள் காலத்துக்கேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும் என கல்வி நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால் தகவல் தொழில்நுட்பத்தை ஆறாம் வகுப்பிலிருந்து ஒரு பாடமாக்க தீர்மானித்துள்ளோம் என அவர் குறிப்பிட்டார்.

இது தகவல் தொழில்நுட்பத்தைக் கற்பிப்பதற்கான வசதியுள்ள பாடசாலைகளில் முதலில் அமுல் படுத்தப்படும் என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரி வித்தார்.

தகவல் தொழில் நுட்பத்திற்கான பாடத்திட்டம் தேசிய கல்வி நிறுவகத்தின் நிபுணர்களால் தயாரிக்கப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வெளிவிவகார அமைச்சின் செயலர் நிதியமைச்சிற்கு மாற்றமாகின்றார்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சின் செயலர் றொமேஸ் ஜெயசிங்க நிதியமைச்சுக்கு மாற்றப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இவர் இலங்கை நிதி அமைச்சின் மேலதிக செயலராக நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சீனாவில் இலங்கையின் தூதுவராகக் கடமையாற்றிய கருணாதிலக அமுனுகம வெளிவிவகார அமைச்சின் புதிய செயலராக நியமிக்கப்படவுள்ளார்.

இவர் அடுத்த மாதம் முதலாம் திகதி புதிய பதவியைப் பொறுப்பேற்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கருணாதிலக அமுனுகம இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகளை புதிய உச்சத்துக்குக் கொண்டு செல்வதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்.

அதற்கான பரிசாகவும், எதிர்காலத்தில் இலங்கை சீனா இடையிலான உறவுகளின் முக்கியத்துவம் கருதியும் இவர் வெளிவிவகார அமைச்சின் செயலராக நியமிக்கப்படவுள்ளார்.

அதேவேளை, இலங்கை வெளிவிவகார அமைச்சு வினைத்திறனுடன் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது.

இலங்கை மீதான அனைத்துலக நெருக்கடிகள் அதிகரித்ததற்கு வெளிவிவகார அமைச்சின் வினைத்திறனின்மையே காரணம் என்று கூறப்படுகிறது.

இதன்காரணமாகவே றொமேஸ் ஜெயசிங்க சக்திவாய்ந்த வெளிவிவகார அமைச்சின் செயலர் பதவியில் இருந்து, அவ்வளவு முக்கியத்துவம் இல்லாத நிதியமைச்சின் மேலதிக செயலர் பதவிக்கு மாற்றப்படவுள்ளார் என்றும் தெரியவருகிறது.

## இஸ்ரேலிடமிருந்து கிபிர் விமானங்களை வாங்கும் எண்ணம் இல்லையெனத் தகவல்

(கொழும்பு)

இஸ்ரேலிடம் இருந்து கிபிர் போர் விமானங்களை வாங்கும் எண்ணம் இல்லை என்று இலங்கை விமானப்படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கை விமானப்படையின் இரண்டு கிபிர் போர் விமானங்கள் கடந்த முதலாம் திகதி கம்பஹாவில் நடுவானில் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக் குள்ளாகின.

இந்த விமானங்களுக்குப் பதிலாக புதிய கிபிர் விமானங்களை வாங்கும் எண்ணம் தமக்கு இல்லை என்று இலங்கை விமானப்படை கூறியுள்ளது.

இலங்கை விமானப்படையிடம் போதியளவு போக்குவரத்து விமானங்களும், போர் விமானங்களும் உள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்துவிட்டதால், இலங்கை விமானப்படைக்குப் போர் விமானங்களின் தேவை குறைந்து விட்டது என்றும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

கிபிர் விமானங்கள் மோதிக் கொண்ட சம்பவத்தை அடுத்து இலங்கை விமானப்படை கிபிர் விமானங்கள் பறப்பதற்குத் தடைவிதித்துள்ளது.

விமானப்படையிடம் உள்ள அனைத்து கிபிர் விமானங்களினதும் தொழில்நுட்பத் தரம் பரிசோதிக்கப்பட்ட பின்னரே அவற்றைப் பறக்க அனுமதிப்பது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கிபிர் போர் விமானங்கள் நடுவானில் மோதிக் கொண்ட சம்பவம் தொடர்பாக ஆராய அமைக்கப்பட்ட எயர் வைஸ் மார்ஷல் கபில ஜெயம்பதி தலைமையிலான உயர்மட்ட விசாரணைக்குழு தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருகிறது.

இந்தக் குழுவினர் விபத்துக்குள்ளான விமானங்கள் விழுந்த இடங்களைப் பார்வையிட்டுள்ளனர்.

விபத்துக்குள்ளான கிபிர் விமானங்களின் அனைத்துப் பாகங்களும் கட்டுநாயக்க விமானப்படைத் தளத்துக்குக் கொண்டு வரப்பட்டு ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன் விபத்துக்குள்ளான கிபிர் விமானங்களுடனான தகவல் தொடர்புகள், கட்டுப்பாட்டுக் கோபுர தகவல் பரிமாற்றங்களும் விசாரணை செய்யப்பட்டுள்ளன.

இந்தக் குழுவின் அறிக்கை இன்னும் சில வாரங்களில் இலங்கை விமானப்படைத் தளபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

## இராஜதந்திரிக்கு அபராதம்

(கொழும்பு)

நோர்வேயின் உயர்மட்ட இராஜதந்திரி ஒருவருக்கு இலங்கையில் ஒன்றரை இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையே இந்தச் அபராதத்தை விதித்துள்ளது.

கொழும்பு நகரில் இந்தவாரம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரிகள் குடிநீர் திருட்டுத் தொடர்பான சோதனைகளை மேற்கொண்டனர்.

அப்போது கிரகரி வீதியில் வதிவிடத்தைக் கொண்டுள்ள நோர்வேயின் உயர் இராஜதந்திரியின் இல்லத்தில் குடிநீர் திருடப்பட்டு வந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அந்தக் குடிநீர்க் குழாயில் திருட்டு இடம்பெறுவதை நோர்வே இராஜதந்திரி அறிந்திருக்கவில்லை.

எனினும் அவருக்கு 156,158 ரூபாவை இலங்கையின் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அபராதமாக விதித்துள்ளது.

## காணாமற் போன எக்னலிகொட கவனத்துடன் நோக்கவுள்ள ஐ.நா

(கொழும்பு)

இலங்கையில் காணாமல் போன பிரபல்ய ஊடகவியலாளரான பிரகீத் எக்னெலிகொட தொடர்பில் கவனம் செலுத்தவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளரின் பேச்சாளர் மார்ட்டீன் நெர்ஸ்கி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் ஊடகவியலாளர் சந்திப்பின் போது முன்வைக்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் ஐந்து வெவ்வேறு அமைப்புகளிடமிருந்து குறித்த ஊடகவியலாளரைக் கண்டுபிடிக்க உதவி கோரிய கடிதங்கள் சபைக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவ்விடயத்தைத் தாம் வெறுமனே மேலோட்டமாகப் பார்க்க போவதில்லையெனவும் மிகுந்த கவனத்துடன் ஆழ்ந்து நோக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெள்ள நிவாரணத் தொகையை தேர்தலுக்கு பயன்படுத்தும் அரசு

## குற்றஞ்சாட்டுகிறது ஜே.வி.பி



(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவென கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு உதவிகளைக் கொண்டு அரசாங்கம் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா இந்தக் குற்றச்சாட்டினை முன்வைத்தார்.

முன்னர் யுத்தத்தைச் சாட்டு கூறினர். இப்போது வெள்ளத்தைப் பிடித்துள்ளனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைத்த மிகப் பெரிய நிவாரணத் தொகைகள் அனைத்தையும் மக்களுக்கு வழங்கவில்லை. அவற்றை தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகின்றனர் என அவர் கூறியுள்ளார்.

எண்ணெய் விலையை அதிகரிக்கவில்லை. அது போதாதா என இப்போது எம்மிடம் கேட்டு தங்களை காப்பாற்றிக் கொள்ள அரசாங்கம் நினைப்பதாக ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் அரசாங்கத்தின் இயலாமை வெளிப்படுவதாகவும், அதனை அரசாங்கத்தால் மறைக்க முடியாதுள்ளது என்பதற்காக பொய் சொல்லி மக்களை ஏமாற்ற ஆரம்பித்துள்ளது. போரின் காரணமாக இடம பெயர்ந்த வடக்கு மக்கள் படிப்படியாக குடியேற்றப்பட்டுள்ளனர் என அரசு கூறுவதில் எதுவித உண்மையும் இல்லை. முகாம்களில் உள்ள மக்கள் பஸ்களில் கொண்டு செல்லப்பட்டு அவர்கள் குடியிருந்த பிரதேசங்களில் இறக்கி விடப்பட்டுள்ளனர். இதுவே அரசின் மீள் குடியேற்றம்.

வடக்கில் மக்கள் இப்போது கெடுபிடிகளுக்கு உள்ளாகி இருக்கின்றனர். அங்கு ஜனநாயகம் இல்லை.

வடக்கின் வசந்தம் என்பது சுலோகம் மாத்திரமே. அரசு அம்மக்களுக்கு எந்த வகையிலும் வசந்தத்தை அனுபவிக்க வழி செய்யவில்லை.

அங்கு அரசியல் கட்சிகள் சுதந்திரமாக பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரச பாடசாலைகளை மூன்று மணிவரை நடத்துவது கட்டாயமாக்கப்படவில்லை

## ஜனாதிபதி செயலர் தெரிவிப்பு



(கொழும்பு)

அரச பாடசாலைகளை மாலை 3 மணிவரை நடத்துவது கட்டாயப்படுத்தப்படவில்லை என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

அரச பாடசாலைகள் மாலை 3 மணிவரை நடத்தப்படுவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதாக பல இடங்களில் தவறான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதை அடுத்தே ஜனாதிபதியின் செயலாளர் இந்தத் தகவலை வழங்கியுள்ளார்.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடம் கலந்துரையாடியதன் பின்னரே பாடசாலை நேரத்தை நீடிப்பது குறித்து தீர்மானம் எடுக்கப்பட வேண்டுமென்பது ஜனாதிபதியின் கருத்து என லலித் வீரதுங்க கூறியுள்ளார்.

பாடசாலைகள் மாலை 3 மணிவரை நடத்தப்பட வேண்டுமெனக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன கடந்த காலங்களில் கூறிவந்துள்ளார்.

மாணவர்களுக்கு விருப்பமில்லாத எதனையும் ஜனாதிபதி நடைமுறைப்படுத்த மாட்டார் எனவும், நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்துக் கலந்துரையாடப்பட்டதாகவும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க குறிப்பிட்டார்.

# அமைச்சர் பசில் ராஜபக்ஷ இன்று நெடுங்கேணி விஜயம்

(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இன்று நெடுங்கேணிக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கு அமைச்சர் தலைமை தாங்கவுள்ளார்.

யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட இப்பிரதேசத்தின் அபிவிருத்தி குறித்து கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக வவுனியா நகரசபையின் ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அப்துல்பாரி சரீவ் தெரிவித்தார்.

வர்த்தக மற்றும் முதலீட்டு விவகாரத்துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன்,வன்னி எம்.பி ஹுனைஸ் பாருக் உள்ளிட்ட பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

# அரசு முன்மொழிந்த தூதுவர்களை பிரிட்டன்,அவுஸ்ரேலியா ஏற்கமறுப்பு

(கொழும்பு)

முன்னாள் கடற்படைத் தளபதியை அவுஸ்ரேலியாவுக்கும், பாலித கோஹன்னவை பிரித்தானியாவுக்கும் தூதுவர்களாக நியமிக்க இலங்கை அரசாங்கம் முன்மொழிந்த போதும்- அதை இந்த நாடுகள் நிராகரித்துள்ளதாக ஆங்கில இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் திசார சமர சிங்கவை அவுஸ்ரேலியாவுக்கான தூதுவராகவும், தற்போது ஐ.நாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக உள்ள பாலித கோஹன்னவை பிரித்தானியாவுக்கான தூதுவராகவும் நியமிக்க இலங்கை அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

இவர்களின் நியமனங்கள் தொடர்பான முன்மொழிவை இந்த நாடுகளின் அரசாங்கங்களுக்கு இலங்கை அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தது.

ஆனால் பிரித்தானியாவும், அவுஸ்ரேலியாவும் இலங்கை அரசாங்கம் முன்மொழிந்த பாலித கோஹன்னவையும், அட்மிரல் திசார சமரசிங்கவையும் தூதுவர்களாக ஏற்க மறுத்துள்ளன.

இறுதிப்போரின் போது சரணடைய முன்வந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளிப்பதாக இலங்கை அரசின் சார்பில் வாக்குறுதி கொடுத்திருந்தார் பாலித கோஹன்ன.

அவருக்கு எதிராக அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் போர்க்குற்ற வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இறுதிப் போரின் போது இலங்கை கடற்படையின் நடவடிக்கைத் தளபதியாக இருந்து பொதுமக்கள் மீதான பீரங்கித் தாக்குதல்களுக்கு பொறுப்பாக இருந்தவர் என்ற வகையில் அட்மிரல் திசார சமரசிங்க மீதும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் உள்ளன.

இவரை அவுஸ்ரேலியாவுக்கான தூதுவராக ஏற்கக் கூடாது என்று அந்த நாட்டின் நாடாளுமன்றத்திலும் குரல் எழுப்பப்பட்டிருந்தது.

இலங்கை அரசாங்கம் முன்மொழிந்த தூதுவர்களை ஏற்க பிரித்தானியாவும் அவுஸ்ரேலியாவும் மறுத்துள்ளதால்- வேறு புதியவர்களை முன் மொழிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவை தூதுவராக ஏற்றுக் கொள்வதற்கு ஜப்பானிய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

முன்னதாக இவரை பிரித்தானியாவுக்கான தூதுவராக நியமிக்க இலங்கை அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

ஆனால் இறுதிப்போரின் போது இலங்கை கடற்படைக்குத தலைமை தாங்கிய அவரை- போர்க்குற்றங்களில் தொடர்பட்டவர் என்பதால் தூதுவராக ஏற்க பிரித்தானியா மறுத்து விட்டது.

இந்தநிலையிலேயே அவர் ஜப்பானுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# நான்கு பொலிஸார் கைது

(கொழும்பு)

கிண்ணியா கண்டல் காட்டுப் பகுதியில் இரண்டு பசு மாடுகளையும் மான் ஒன்றினையும் சுட்டுக்கொன்ற குற்றச்சாட்டின் பேரில் நான்கு பொலிஸாரும் ஐந்து பொதுமக்களும் ரி-56 துப்பாக்கியுடன் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கண்டல் காட்டுப்பகுதியில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

விசேட கடமைக்காக திருமலை பொலிஸ் நிலையத்திலிருந்து வந்த ஒருவரும் மூதூர் பொலிஸ் நிலையத்திலிருந்து வந்த மூவருமே கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களாவர்.

கைது செய்யப்பட்டவர்களை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிவான் உத்தரவிட்டார்.

# உயர்தரத்தில் தோற்றும் மாணவர் விபரத்தை 2ஆம் திகதிக்கு முன் அனுப்புமாறு அறிவிப்பு

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் புதிய பாடவிதானத்தின் அடிப்படையில் தோற்றும் மாணவர்களின் பெயர்ப்பட்டியல்களை அடுத்தமாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்திற்கு அவ்வக் கல்லூரி அதிபர்கள் அனுப்பிவைக்க வேண்டும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஏற்கனவே கல்லூரி அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதில் பழைய பாட விதானத்தின் அடிப்படையில் தோற்றும் மாணவர்களின் பெயர் விபரங்கள் இந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படாது என்று அவர் வற்புறுத்தியுள்ளார்.

புதிய பாடவிதானத்தின் அடிப்படையிலான அட்டவணையில் பழைய பாடவிதானத்தின் அடிப்படையிலான மாணவர்களின் பெயர்களைச் சேர்ப்பது மிகமோசமான நடவடிக்கையாகும்.

புதிய பாடவிதானத்தின் அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரும் பரீட்சைகள் திணைக்களத்தில் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு மாணவர்கள் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டிய காலம் அடுத்த மாதம் 2ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

அதேவேளை பழைய பாடவிதானத்தின் அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் விண்ணப்பங்களை அனுப்பும் இறுதித்திகதி கடந்த மாதம் 28ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

பழைய பாடவிதானத்தின் அடிப்படையில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் எவரும் புதிய பாடவிதானத்தின் அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொரியா வழங்கிய வேலைவாய்ப்பினை முறையாகப் பயன்படுத்த தவறிய இலங்கை

(கொழும்பு)

கடந்த 5 வருட காலத்தில் கொரியாவினால் வழங்கப்பட்ட வேலைவாய்ப்புகளில் சுமார் மூன்றில் இரண்டு பகுதியை இலங்கை பயன்படுத்தத் தவறியுள்ளதாக நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக்காலப்பகுதியில் 48,800 வேலைவாய்ப்புகள் இலங்கைக்கு ஒதுக்கப்பட்டன. எனினும் 16,501 பேர் மாத்திரமே வேலை வாய்ப்புப் பெற்று நாட்டைவிட்டுச் சென்றுள்ளனர்.

எதிர்க்கட்சியினால் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சினால் அளிக்கப்பட்ட பதிலின்படி 2010 ஆம் ஆண்டு இலங்கைக்கு 7300 வேலைவாய்ப்புகள் ஒதுக்கப்பட்டன. ஆனால் 3583 பேரே நாட்டிலிருந்து சென்றனர். 2009 ஆம் ஆண்டு 17000 வேலை வாய்ப்பு ஒதுக்கப்பட்ட போதிலும் 1284 பேரே அதைப் பயன்படுத்தியுள்ளனர்.

மேற்படி வேலைவாய்ப்பு ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தாமைக்கான காரணம் அமைச்சினால் தெரிவிக்கப்படவில்லை.

அதேவேளை மேற்படி காலப்பகுதியில் கொரிய வேலை வாய்ப்புப் பெற்றவர்களில் அம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் முன்னிலை வகிக்கின்றனர். அங்கிருந்து 1967 பேர் தொழில் வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

கொழும்பிலிருந்து 1720 பேரும்,கம்பஹாவிலிருந்து 1228 பேரும்,களுத்துறையிலிருந்து 1228 பேரும்,கண்டியிலிருந்து 997 பேரும்,மாத்தளையிலிருந்து 354 பேரும்,நுவரெலியாவிலிருந்து 71பேரும், காலியிலிருந்து 997 பேரும் மாத்தறையிலிருந்து 1160 பேரும் மேற்படி 5 வருட காலத்தில் கொரிய வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

அதேவேளை,யாழ்ப்பாணத்திலிருந்து 3 பேரும்,வவுனியாவிலிருந்து 6பேரும்,மட்டக்களப்பிலிருந்து 46பேரும் அம்பாறையிலிருந்து 298 பேரும் திருகோணமலையிலிருந்து 110 பேரும் கொரிய வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

# சட்டவிரோதிகளுக்கு மன்னிப்பு; நாடு திரும்ப விரும்பும் இலங்கையர்

## குவைத் அரசு வெளிநாட்டவருக்கு வழங்கிய வாய்ப்பு

(கொழும்பு)

குவைத் அரசு வழங்கிய பொது மன்னிப்பை அடுத்து சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் இலங்கையர்களில் சுமார் 3500 பேர் குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

குவைத்தில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் அங்கிருந்து வெளியேறும் வகையில், அவர்களுக்கான பொது மன்னிப்பை அந்நாட்டு அரசாங்கம் வழங்கியுள்ளது. எனவே இந்த வாய்ப்பு சட்டவிரோதமாகத் தங்கியுள்ள இலங்கையர்களுக்கு நல்லதொரு சந்தர்ப்பமாகும்.

குவைத் அரசு எதிர்வரும் யூன் மாதம் வரை இந்தப் பொது மன்னிப்புக்காலத்தை அறிவித்துள்ளது. சட்டவிரோதமாக குவைத்தில் பத்து வருடங்களாக வாழ்பவர்களும் உள்ளனர்.இவ்வாறு சட்டவிரோதமாகத் தங்கியுள்ளவர்கள் நாடு திரும்புவதற்கான சகல ஆவணங்களையும் வழங்குவதற்கான நடவடிக்கையை வெளிநாட்டு அமைச்சு எடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கட்சிப் பிரதிநிதிகளுடன் தேர்தல் ஆணையாளர் சந்திப்பு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்து தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மற்றும் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

ராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளை சந்திக்கும் இறுதி சந்தர்ப்பம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# தீவிரமடையும் தேர்தல் பிரசாரம்

(கொழும்பு)

கலிகமுவ பிரதேசத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் பயணம் செய்த வாகனமொன்று மரத்தில் மோதியமையின் தீப்பற்றிக் கொண்டுள்ளது.

இவ்வாகனத்தில் பயணம் செய்தவர்கள் ஐ.ம.சு.முன்னணி ஆதரவாளர்களுடன் மோதலொன்றில் ஈடுபட்ட பின்னரே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# எரிபொருள் விநியோகத்தில் மோசடி; தடுத்து நிறுத்த செய்மதி தொழில்நுட்பம்

(கொழும்பு)

பெற்றோலியப் பொருட்களின் விநியோகத்தின்போது மேற்கொள்ளப்படுகின்ற மோசடிகளைத் தடுப்பதற்காக, விநியோகப் பணிகளை செய்மதிகொண்டு கண்காணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

த பிஸ்னஸ் ஒன்லைன் இணையத்தளம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

எரிபொருட்களை கொண்டு செல்லும் தாங்கிஊர்திகள், நியமிக்கப்பட்ட பாதைகளில் இருந்து விலகிச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எரிபொருள் தாங்கியினுள் நிரப்பப்பட்ட போது காணப்பட்ட வெப்ப நிலையும், அது இறக்கப்படும் போது காணப்படுகின்ற வெப்ப நிலையும் அவதானிக்கப்படுகிறது.

இந்த நிலையில், புதிய செய்மதி ஊடான கண்காணிப்பின் போது, நியமிக்கப்பட்ட பாதைகளை கடக்கும் எண்ணெய் தாங்கிகள் குறித்தும் அவதானிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தபால் மூல வாக்களிப்பு வன்முறைகள் குறைவு

## வாக்களிப்பு வீதம் அதிகம்

(கொழும்பு)

கடந்த 8, 9 ஆம் திகதிகளில் இடம்பெற்ற தபால் மூல வாக்களிப்பில் 70-80 வீதமானோர் வாக்களித்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று அதிகாரி ரோகன ஹெட்டியாராட்சி தெரிவித்துள்ளார்.

இரு நாட்கள் இடம்பெற்ற வாக்களிப்பின்போது பெரியளவிலான தேர்தல் வன்முறைகள் எதுவும் இடம்பெறவில்லை.

அத்துடன், தேர்தல் வாக்களிப்பு இடம்பெற்ற குறிப்பிட்ட சில இடங்களைத் தெரிவுசெய்து தமது அமைப்பிலிருந்து 300 பிரதிநிதிகளை கண்காணிப்பில் ஈடுபடுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

# இவ்வருட கலைஇலக்கிய விருது திருமறைக் கலாமன்றத்துக்கு!

(தும்பளை)

அகில இலங்கை கலை இலக்கியச் சங்கத்தினால் வழங்கப்படுகின்ற அதி உயர் விருது இம்முறை திருமறைக் கலாமன்றத்துக்கு வழங்கப்படவுள்ளதாக அகில இலங்கை கலை இலக்கியச் சங்கத்தின் தலைவர் பண்டிதர் பொன்.சுகந்தன் உத்தியோகபூர்வமான அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

கடந்த வருடம் கொழும்பு தமிழ்ச்சங்கத்துக்கு இவ்விருது வழங்கப்பட்டது. கலை, இலக்கிய வளர்ச்சிக்குச் சிறந்த சேவையினை ஆற்றிவருகின்ற அமைப்புக்களுக்கு இவ்விருது ஒவ்வொரு வருடமும் வழங்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (62)

# வவுனியா நகரசபைத் தலைவர் எஸ்.ஜி.நாதன் இராஜினாமா!

## புதிய தலைவர் யார்?

(வவுனியா)

வவுனியா நகரசபைத் தலைவர் எஸ்.ஜி.நாதன் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

கடந்த 15 மாத காலமாக வவுனியா நகரசபைத் தலைவராக பதவி வகித்த இவர், தனது தனிப்பட்ட காரணத்தினால் பதவியை இராஜினாமாச் செய்துள்ளதாகவும், இராஜினாமாக் கடிதத்தை வவுனியா மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிடத் தனது இராஜினாமாக் கடிதத்தின் பிரதிகளை வடமாகாண ஆளுநர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் கடந்த 2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற நகர சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்றுப் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், வவுனியா நக்ரசபையின் அடுத்த புதிய தலைவர் யார் என்பது கேள்விக் குறியாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (39)

### புலிகளின் பயிற்சி...

இது தொடர்பாக முறைப்படியான பதில் இந்திய வெளிவிவகார அமைச்சின் மூலம் இலங்கை அரசாங்கத் திற்கு விரைவில் அனுப்பப்படும் என இந்திய உயர் ஸ்தானிகராலய வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அவசரகால விவாதத்தை ஆரம்பித்து வைத்த பிரதமர், தமிழ் நாட்டில் புலிகளின் 3 பயிற்சி நிலையங்கள் இரகசியமான இடத்தில் செயற்படுவதாக கூறியிருந்தார். இதற்கு பதிலளி க்கும் முகமாகவே மேற்படி விடயத்தை இந்திய அரசு அறிவித்துள்ளது.

### சர்வதேச அழுத்தங்களை...

இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு சிறந்தவொரு வாழ்வாதாரத்தை வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிடைக்கப்பெற்றுள்ள வெற்றியை எதிர்கால சந்ததியினர் உரிய வகையில் அனுபவிப்பார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நுவரெலியா மாவட்ட செயற்பாட்டாளர்களினால் நுவரெலியாவில் நேற்றையதினம் மக்கள் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### துரித திறன்பெறுகை...

பரிசில் திட்டத்தைக் கல்வி அமைச்சு செயற்படுத்தவுள்ளது.

கல்வி அமைச்சின் இச்செயற்திட்டத்தில் பொருளாதார ரீதியாக நலிவடைந்த குடும்பங்கள் மற்றும் சமுர்த்தித்திட்டக் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

இப்புலமைப்பரிசில்களை பெற்றுக்கொண்டவர்களுக்கு பயிற்சிக் கட்டணம் மற்றும் அச்சிடப்பட்ட பாட விதானங்கள், பரீட்சைக் கட்டணம் என்பவற்றை இச்செயற்திட்டம் பொறுப்பேற்றுக் கொள்வதுடன், பயிற்சிகள் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் சகல பிரதான நரகங்களிலும் நடைபெறவுள்ளதுடன், தொழில் பயிற்சியை முடித்து வெளியேறும் இளைஞர், யுவதி களுக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்க இலங்கை வர்த்தக சபை மற்றும் துறைசார் நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

இப்புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஆர்வமுடையோர் தமது பகுதிப் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு, விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் EKSP செயற்திட்ட மாகாண முகாமையாளர், வடமாகாண கல்வித் திணைக்களம், மருதனார்மடம், சுன்னாகம் என்னும் முகவரிக்கு அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். (26)

### அரசியலுக்கு முழுக்கு..

சுதந்திரமாக தலைவர் தெரிவு செய்யப்பட்டால் நான் அவரிடம் எனது பொறுப்பை ஒப்படைத்து விடுவேன் என்று மீண்டும் மீண்டும் தெரிவித்துள்ளேன். தற்போது அதற்கான நேரம் வந்துள்ளது என தலாய்லாமா கூறியுள்ளார்.

வட இந்திய நகரமான தரம்சாலாவில் பிரதமர் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், தலாய்லாமா ஏற்கனவே அரசியல் தலைவர் பதவியில் இருந்து பாதி விலகி விட்டதாகவே கருதுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### அடிமட்ட மக்களின்...

மூலம் திருகோணமலை, சேருவில பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள குளங்கள், விவசாயக் கிணறுகள் மற்றும் மீன்பிடி நிலையங்களும் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள மூன்று தோட்டங்கள் மற்றும் இரண்டு பாடசாலைகளும் புனரமைக்கப்படுவதுடன், விழிப்புணர்வு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் விவசாய, மீன்பிடி உபகரணங்கள், விதைகள் மற்றும் நாற்றுகள் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் ஊடாக திருகோணமலை மாவட்டத்தில் 1520 குடும்பங்கள் நேரடியாகவும் 3,500 குடும்பங்கள் மறை முகமாகவும் இரத்தினபுரி மாவட்டத்தில் 485 குடும்பங்கள் நேரடியாகவும் நன்மையடையவுள்ளன.

ஜப்பானிய அரசினால் அடிமட்ட மக்களை கட்டியெழுப்புவதற்காக உருவாக்கப்பட்ட திட்டமே அடிமட்ட மனித பாதுகாப்பு நன்கொடைத் திட்டமாகும்.

இத்திட்டத்தின் ஊடாக கடந்த 2010 ஏப்ரல் முதல் 2011 ஏப்ரல் வரையான காலப்பகுதியில் 10 திட்டங்களுக்காக 190 மில்லியன் ரூபா நிதியை ஜப்பான் அரசாங்கம் இலங்கைக்கு ஒதுக்கியுள்ளது.

1989ஆம் ஆண்டு முதல் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட அடிமட்ட மனித பாதுகாப்பு நன்கொடைத் திட்டத்தின் ஊடாக 2,800 மில்லியன் ரூபா பெறுமதியான 217 திட்டங்கள் இல ங்கை முழுவதும் ஜப்பானிய அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடிமட்ட மக்கள் மத்தியில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தின் ஊடாக சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திகளை மேற்கொள்வதே அடிமட்ட மனித பாதுகாப்பு நன்கொடைத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

### மிருசுவில் படுகொலை...

2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற இந்தக் கொலை தொடர்பில், குற்றம் சுமத்தப்பட்ட ஐந்து இராணுவத்தினருக்கு எதிரான வழக்கு விசாரணை, நேற்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண நீதிவானினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை ஆராய்ந்ததன் பின்னரே, கொலைச சம்பவம் இடம்பெற்ற இடத்தை நேரில் சென்றுபார்வையிடுவதற்கான பணிப்புரை மூவர் அடங்கிய நீதியரசர்கள் குழுவினால் விடுக்கப்பட்டது.

இதற்கமைய, யாழ்ப்பாண நீதிவானினால் அறிக்கை ஒன்று நேற்றைய தினம் உயர் நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்று பல வருடங்கள் ஆகியுள்ள நிலையில் குறித்த இடத்தில் பல்வேறுபட்ட மாறுதல்கள் ஏற்பட்டுள்ளதாக யாழ்ப்பாண நீதிவானின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வவுனியா மாவட்டத்தில்...

இதில் கைத்தொழில் வாணிப அமைச்சர் ரிசாட் பதியூதீன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உனேஸ் பாரூக் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (39)



[illegible] படிப்பகம்
[illegible] நகர சபை, யாழ்ப்பாணம்.

# பளை வைத்தியசாலை விரைவில் பழைய நிலைக்குத் திரும்பும்

## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பளை வைத்தியசாலை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவரப்பட்டு பிரதேச மக்களுக்கு நிறைவான சேவை வழங்கப்படும் என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று பளை - கரந்தாய் பிரதேசத்தில் 74 இலட்சம் ரூபா செலவில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றுக்கு அடிக்கல் நாட்டி வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக பிரிவு அதிகளவான அடிப்படைப் பிரச்சினைகளைக் கொண்ட பிரதேசமாக உள்ளது. இதற்குக் காரணம் தாமதமான மீள்குடியேற்றமாகும்.

எனவே விரைவில் இந்நிலைமையினை மாற்றியமைக்க எம்மாலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம். குறிப்பாக இப்பிரதேசத்தில் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகளை அதிகரிக்க முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இம்மாவட்டத்தில் பெரும்பாலான ஆரம்ப சுகாதார நிலையங்கள் சேதமடைந்துள்ளதாகவும் அதில் 9 ஆரம்ப சுகாதார நிலையங்களைப் புனரமைப்பதற்கு தாம் நிதியினை ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் அழகான ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு கிருஸ்ணபிள்ளை மயில்வாகனம், சாரதா ஆகியோர் தங்களுடைய காணிகளை அன்பளிப்புச் செய்துள்ளனர். எனவே மக்கள் பிரதிநிதி என்ற வகையில் நானும் இப்பிரதேச மக்களும் என்றும் அவர்களுக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

சர்வோதயம் நிறுவனத்தினரால் அமைக்கப்படும் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பளை சுகாதார வைத்திய அதிகாரி செல்வி மைதிலி, சர்வோதய நிறுவன மாவட்ட இணைப்பாளர் உதயகுமார், திட்ட முகாமையாளர் மனோச், திட்ட இணைப்பாளர் டினேஸ்வரன், தொழிநுட்ப ஆலோசகர் லிங்கேஸ்வரன் மற்றும் சிரேஷ்ட சுகாதார பரிசோதகர் சிவகுமார் மற்றும் ஈ.பி.டிபி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், சோரன்பற்று மாசார் முகாவில் கிராம அலுவலர்கள், பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவையின் உபதலைவர் மார்க்கண்டு, கிராம மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# நோயாளர்களுக்கான உணவு விநியோகம் வினைத்திறனுடன் தொடர ஏற்பாடு

## வடமாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வைத்திய சாலைகளில் நோயாளர்களின் உணவு விநியோகத்துக்காக ஒதுக்கப்படும் நிதியை விட அதன் செலவினம் அதிகரித்துச் செல்வதைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளரால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விடுதிகளில் 5 நோயாளர்களுக்கு குறைவாக உள்ள வைத்தியசாலைகளில் உணவு விநியோகத்தை இடைநிறுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

உணவு விநியோகத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியை விட செலவினம் மிகக்கூடுதலாக அதிகரித்துச் சென்றதைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இந்த அறிவுறுத்தலை மீளாய்வு செய்யுமாறு பல்வேறு தரப்பினராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. எனவே பணியாளர்களுக்கு உணவிற்குப் பதில் பணம் வழங்க அவர்களது அபிப்பிராயம் பெறப்படவிருக்கிறது.

எனினும் நோயாளர்கள் அனைவருக்கும் உணவு விநியோகம் ஒப்பந்தகாரர் மூலம் அல்லது அந்தப் பிரதேச பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மேலும் இவ்விடயம் தொடர்பாக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளரால் வைத்திய சாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தினை வடமாகாண ஆளுநர் ரத்துச் செய்வதாக அறிவித்துள்ளார்.

# சுற்றுப்புற சுகாதாரம் பேணல்; யாழ். நகரப்பகுதியில் துரிதம்

## யாழ். மாநகர சுகாதாரக் குழு தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையின் பொது சுகாதார பொறியியல் பிரிவினர் கடந்த மாசி மாதம் 17 லட்சத்து 27 ஆயிரத்து 647 ரூபாவை வருமானமாக ஈட்டியுள்ளதாக யாழ். மாநகரசபையின் சுகாதாரக் குழுவின் தலைவர் மனுவல் மங்களநேசன் தெரிவித்தார்.

நேற்று யாழ். மாநகரசபையின் சுகாதாரக் குழுக் கூட்டம் யாழ். மாநகரசபை முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபையின் பொது சுகாதார பொறியியல் பிரிவினர் நகரின் எல்லைப்பரப்பினுள் வணிக நிலையங்கள், பொது நிறுவனங்கள், சந்தைகள், வீடுகளின் கழிவகற்றல் நடவடிக்கை மற்றும் கழிவறைக் கழிவகற்றல் சுகாதார நடவடிக்கைகளின் மூலமாக இவ்வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் யாழ். மாநகரசபையின் சுகாதாரப் பகுதியினரின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டு அதன்மூலம் மேலும் வருமானம் பெறுவது தொடர்பாகவும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் யாழ். மாநகரசபையின் உறுப்பினர்கள், மாநகரசபை செயலாளர் மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள், ஊழியர்கள் கலந்துகொண்டனர். (பா)

# மாத இறுதிக்குள் பரீட்சைப் பெறுபேறுகள்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் இந்த மாத இறுதிக்குள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன கல்வி அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த மாத இறுதிக்குள் சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறுகிய அரசியல் நோக்கத்துக்காக, மக்களுக்காக செய்கின்ற வேலைத்திட்டங்களை கைவிடப்போவதில்லை எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

# கடுகதி வேகத்தில் வாகனங்கள்; விபத்துக்கள் ஏற்பட அதிக சாத்தியம்

## யாழ். பருத்தித்துறை வீதியின் இன்றைய நிலை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில் வேகத்தடை அமைக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இவ்வீதி முன்னர் குன்றும் குழியுமாகக் காணப்பட்டது அதனால் வாகனங்கள் குறைந்த வேகத்துடன் பயணம்செய்தன.


தற்போது வீதி அகலிக்கப்பட்டு காபட் முறையில் செப்பனிடப்பட்டுள்ளது. இதனால் சாரதிகள் அசுரவேகத்தில் பயணிக்கின்றனர். இவ்வீதி அதிக வளைவுகளைக் கொண்டது. இவ்வளைவுகளிலும் வேகம் குறைப்பதில்லை. இதனால் விபத்துகள் ஏற்பட்டுவருகின்றன.

அத்துடன் அதிகமான அளவு எரிபொருள் நிரப்பியபடி செல்லும் வாகனங்கள் வீதியில் வேகமாக திரும்புகின்றன. இதனால் வாகனத்தின் எரிபொருள் வீதியில் சிந்துகிறது. இதில் தொடர்ந்துவரும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகின்றன.

அண்மையில் துர்கையம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள வளைவில் மோட்டார் சைக்கிளில் வந்த தம்பதிகள் இவ்விதம் விபத்துக்குள்ளாகினர். ஆயினும் அவர்கள் அவதானமாய் சிறிய காயத்துடன் தப்பினார்கள். எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு வீதியில் குறுக்காய் வேகத் தடை அமைக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வட,கிழக்கின் குழந்தைகளுக்கு இரும்புச் சத்துக் குறைபாடு

## சுகாதார அமைச்சு திடுக்கிடும் தகவல்



(கொழும்பு)

நாட்டிலுள்ள கர்ப்பிணித் தாய்மாரில் 16.7 வீதத்தினரும் பாலூட்டும் தாய்மாரில் 20.5 வீதத்தினரும் இரும்புச் சத்துக் குறைபாடுடையவர்களாக காணபபடுவதாக சுகாதார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை வடக்கு, கிழக்கில் மாத்திரம் மேற்படி இரு தரப்பினரதும் இரும்புச்சத்துக் குறைபாடு விகிதம் 17.5 ஆக இருப்பதுடன் குறைநிறை பிரசவமானது 18 வீதமாக கணிப்பிடப்பட்டிருப்பதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது, இலங்கையில் ஆண்டு ஒன்றுக்கு பிறக்கின்ற குழந்தைகளில் 16.6 வீதமான குழந்தைகள் குறை நிறையுடன் பிறக்கின்றன.

அத்துடன் நாட்டிலுள்ள ஐந்து வயதுக்கு குறைந்த குழந்தைகளில் 25.2 வீதமான குழந்தைகள் இரும்புச் சத்துக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளன.

நாட்டிலுள்ள மொத்த கர்ப்பிணித் தாய்மார் 16.7 வீதமானோரும், தாய்ப் பாலூட்டும் தாய்மார் 20.5 வீதமானோரும் இரும்புச் சத்துக் குறைபாடு காணப்படுகின்றவர்களாக அறியப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வடக்கு கிழக்கில் 5 வயதுக்கு குறைவான குழந்தைகளில் 17.4 முதல் 24.4 வீதம் வரையிலான குழந்தைகள் இரும்புச் சத்துக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான போசாக்கு குறைபாட்டினைத் தீர்ப்பதற்கு சுகாதார அமைச்சு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன், குறைபாடு காணப்படுகின்ற கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார் மற்றும் 5 வயதுக்கும் குறைந்த குழந்தைகளில் இரும்புச் சத்து குறைபாடுள்ள குழந்தைகள் என சகல தரப்பினருக்கும் 2 பைக்கட்டுக்கள் வீதம் திரிபோஷா சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றது.

# மாகியப்பிட்டியில் வீதி விபத்து பள்ளி மாணவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மாகியப்பிட்டிச் சந்தியில் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்ற விபத்தொன்றில் மாகியப்பிட்டியைச் சேர்ந்த வதனகுமார் அருண்குமார் என்னும் 15 வயதுச் சிறுவன் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சைக்கிளில் வீடு சென்றுகொண்டிருந்த இந்தச் சிறுவனை ஹன்டர் வாகனமொன்று மோதிவிட்டுத் தப்பிச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுவன் சிகிச்சைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (மி)

# பெண் அரசியல் பிரதிநிதித்துவம் இலங்கைக்கு 230 ஆவது இடம்

(கொழும்பு)










பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில், இலங்கைக்கு 120 ஆவது இடம் வழங்கப்பட்டுள்ளது. சமீபத்திய ஆய்வுகளை மேற்கோள்காட்டி, த ஹிந்து பத்திரிகை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலின் பின்னர், 12 பெண்கள் மாத்திரமே இலங்கையின் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியமையைத் தொடர்ந்து, இந்த இடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த பட்டியலில் ருவாண்டா முதலாம் இடத்தில் உள்ளது. அங்கு 56 சதவீதமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெண்களாகவே காணப்படுகின்றனர். இந்தியா இந்தப் பட்டியலில் 98 ஆவது இடத்தில் உள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கற்றலுக்கான சில குறிப்புகள்

| | | |
|---|---|---|
|  முன்னால் சிறுவர்கள் கடக்கும் பாதை |  மூன்று வீதிகளின் சந்தி |  இத்திசையில் வாகனம் செல்லத் தடை. |
|  முன்னால் பாதசாரிகள் கடவை |  ஒடுக்கமான பாலம் முன்னால் |  வலது பக்கம் திரும்பத் தடை |
|  முன்னால் துவிச்சக்கர வண்டிக் கடவை |  முன்னால் சுற்று வளைவு |  இடது பக்கம் திரும்பத் தடை |
|  முன்னால் பாதை திருத்த வேலை நடைபெறுகிறது. |  அபாயகரமான சரிவு முன்னால் |  பேருந்து செல்லத் தடை |
|  முன்னால் பாதுகாப்பான புகையிரதக் கடவை |  அபாயகரமான ஏற்றம் முன்னால் |  ஒலியெழுப்பத் தடை |
|  முன்னால் பசுக்கள் கடக்கும் பாதை |  வழுக்கும் வீதி முன்னால் |  இவ்விடத்தில் எந்த வாகனமும் செல்லத்தடை |
|  பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை |  முன்னால் பாதை வேலை |  இவ்வீதியால் வாகனங்கள் ஒன்றையொன்று முந்தத் தடை. |
|  இடதுபக்கம் வளைந்து செல்கிறது |  நிறுத்துக. |  எதிரே வைத்தியசாலை உள்ளது. |
|  வலதுபக்கம் வளைந்து செல்கிறது |  கார், மோட்டார் சைக்கிள் செல்லத் தடை. |  சகல வாகனங்களும் தரிக்குமிடம் |
|  சகல வாகனங்களும் உட்செல்லத் தடை |  வேகத்தின் வரையறை |  கட்டாயச் சுற்று வட்டம் |
| வாகனங்கள் தரிக்கவோ, தாமதிக்கவோ கூடாது.  |  லொறி மாத்திரம் உட்செல்லத் தடை | |









தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011
பகுதி - I, II
விடைகள்
கல்வி முரசு
வெளியீடு 04
இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்களின் விடைகள்

## பகுதி -I

01. 02
02. 03
03. 01
04. 03
05. 02
06. 
07. 
08.

| | |
|---|---|
| க | ..ப்... |
| ..பு.... | று |

09. 02
10. 01
11. 9, 3
12. 60 மீற்றர்
13. B
14. 03
15. 02
16. 01
17. 03
18. 02
19. 03
20. 01
21. 654
22. 545
23. I. 50 II. 02
24. 01
25. 01
26. 03
27. 02
28. 04
29. 03
30. 01
31. 02
32. 03
33. 01
34. 02
35. 01
36. 28
37. பார்த்தல்
38. மேசன்
39. 11
40. பால் + சோறு

## பகுதி -II

01. 1) வயோதிபரான கச்சான் வியாபாரி
2) களைப்பாறுவதற்கு / இளைப்பாறுவதற்கு
3) பரந்து செழித்து வளர்ந்திருந்தது.
4) காகத்தின் கூட்டையும் அதனுள் இருந்த இரண்டு குஞ்சுகளையும்.
5) தாயைத்தேடி / பசியால் / உணவுக்காக
6) 1. பிரயாணம் 2. தரை / பூமி
7) 1. இளைஞர் 2. குறுகிய
8) சரியான கருத்தை வெளிப்படுத்தும் வாக்கியங்கள்
9) வயோதிபர் / மரம் / குருவி / குருவிக் குஞ்சு
10) சாய்ந்தார் / கண்டார் / கொடுத்தது / ஆரம்பித்தார்

02. 1. அவள் 2. எங்கள் புத்தகம்

03. 1. Play ground 2. That dog

04. 1. ச.கேசவன்
2. கே.இலக்குமி
3. ஆசிரியர்
4. இலக்கம் 3/2, பெரேரா லேன், வெள்ளவத்தை.
5. 3

05. 1. சரி
2. பிழை
3. பிழை
4. சரி
5. சரி

06. 1. 3 2. 2
3. 2 4. 1
5. 1

07. 1. 4 2. 5
3. 1 4. 3
5. 2

08. 1. சீவுளி 2. துருத்தி
3. பாரந்தூக்கி 4. தூக்குக் குண்டு
5. மட்டப்பலகை

09. 1. திங்கள்/வியாழன்
2. புதன் 3. 90 L
4. 1000 L 5. 220 L

10. 56.00
11. 110.00
12. 20 kg
13. 12 m
14. 15
15. 5
16. கட்டுரை

## புள்ளியிடல்

| | | | |
|---|---|---|---|
| வினாத்தாள் I | 40 X 2.5 | = 100 | புள்ளி |
| வினாத்தாள் II | | | |
| வினா 01 | 10 X 2 | = 20 | புள்ளி |
| வினா 02 | 1 X 2 | = 2 | புள்ளி |
| வினா 03 | 1 X 2 | = 2 | புள்ளி |
| வினா 04 | 5 X 2 | = 10 | புள்ளி |
| வினா 05 | 5 X 2 | = 10 | புள்ளி |
| வினா 06 | 5 X 1 | = 5 | புள்ளி |
| வினா 07 | 5 X 1 | = 5 | புள்ளி |
| வினா 08 | 5 X 1 | = 5 | புள்ளி |
| வினா 09 | 5 X 2 | = 10 | புள்ளி |
| வினா 10முதல் 15வரை | 3 X 6 | = 18 | புள்ளி |
| வினா 16 | | = 12 | புள்ளி |
| தெளிவான எழுத்து | | = 1 | புள்ளி |
| மொத்தப்புள்ளி | | = 100 | புள்ளி |

# கற்றலுக்கான் சில குறிப்புகள்

## பொதுவாக அறிந்திருக்க வேண்டிய சில விடயங்கள்

01. இலங்கையின் தேசிய மிருகம் எது? - மர அணில்
02. இலங்கையின் தேசிய பறவை எது? - காட்டுக்கோழி
03. இலங்கையின் தேசிய மலர் எது? - நீலோற்பலம்
04. இலங்கையின் தேசிய மரம் எது? - நாகமரம்
05. இலங்கையின் தேசிய விளையாட்டு எது? - கரப்பந்தாட்டம்
06. இலங்கையின் நீளமான நதி எது? - மகாவலி கங்கை
07. இலங்கையின் மிக உயரமான மலை எது? - பீதுறுதாலகால மலை
08. இலங்கையின் மிகப்பெரிய தாவரவியற் பூங்கா எது? - பேராதனைப், பூங்கா
09. இலங்கையின் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம் - திருகோணமலை
10. இலங்கையையும், இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை எது? - பாக்குநீரிணை
11. இலங்கையில் அமைந்துள்ள செயற்கைத் துறைமுகம் எது? - கொழும்பு
12. இலங்கையில் விலங்குகள் சரணாலயம் அமைந்துள்ள இடம் எது? - வில்பத்து
13. இரத்தினக் கல் அதிகளவ்வு கிடைக்கும் இடம் எது? - இரத்தினபுரி
14. இலங்கையின் அதியுயர்ந்த நீர்வீழ்ச்சி எது? - பம்பரகந்த
15. கறையானால் அரிக்கப்படாத தாவரம் எது? - தேக்கு, வேம்பு
16. அழகிய கூடு கட்டும் பிராணி எது? - தூக்கணாங் குருவி
17. பறக்க முடியாத பறவை எது? - தீக்கோழி
18. மிகப்பெரிய முட்டையிடும் பறவை எது? - தீக்கோழி
19. மிகச்சிறிய முட்டையிடும் பறவை எது? - தேன்சிட்டு
20. பாலைவனக் கப்பல் எனப்படும் மிருகம் எது? - ஒட்டகம்
21. மிகச் சிறிய இலையுடைய தாவரம் எது? - நெப்பந்திசு
22. உயரமான விலங்கு எது? - ஒட்டகச் சிவிங்கி
23. வேகமாகப் பறக்கும் பறவை எது? - பாடும் பறவை
24. மிக வேகமாகத் தரையில் ஓடும் விலங்கு எது? - சிறுத்தைப் புலி
25. உலகின் மிகப் பெரிய கண்டம் எது? - ஆசியாக் கண்டம்
26. உலகின் நீளமான நதி எது? - நைல் நதி
27. உலகின் மிகப்பெரிய பாலைவனம் எது? - சகாராப் பாலைவனம்
28. உலகின் மிக உயர்ந்த மலைச் சிகரம்? - எவரெஸ்ட்
29. உலகின் அதிகளவு மக்கள் தொகை கொண்ட நாடு? - சீனா
30. உலகிலேயே குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட நாடு - வத்திக்கான் நகரம்
31. உலகிலேயே மிகச் சிறிய கண்டம்? - அவுஸ்ரேலியா
32. பூமிக்கு மிக அருகில் உள்ள கோள் எது? - வெள்ளி
33. பூமிக்கு மிகத் தொலைவில் உள்ள கோள் எது? - புளூட்டோ
34. மிகப்பெரிய கோள் எது? - வியாழன்
35. ஒளி மிகுந்த கோள் எது? - வெள்ளி
36. மிகச் சிறிய கோள் எது? - புதன்
37. சமுத்திரங்களில் மிக ஆழமானது எது? - மரியானா ஆழி
38. மின்சாரத்தைக் கண்டுபிடித்தவர் யார்? - மைக்கல்பரடே
39. வானொலியைக் கண்டுபிடித்தவர் யார்? - மார்க்கோனி
40. தொலைபேசியைக் கண்டு பிடித்தவர்? - அலெக்சாண்டர் கிரகாம் பெல்
41. மோட்டார் காரைக் கண்டுபிடித்தவர் யார்? - புல்மன்
42. மின்குமிழைக் கண்டுபிடித்தவர் யார்? - தோமஸ் அல்வா எடிசன்





# கற்றலுக்கான சில குறிப்புகள்

## இலங்கையின் பிரதான ஆறுகள். (முக்கியமான ஆறுகளில் சில இங்கு தரப்பட்டுள்ளன)

| | | | |
|---|---|---|---|
| 01. மகாவலி கங்கை | 02. ஜின் கங்கை | 03. கிரிந்தி ஓயா | 04. மாணிக்க கங்கை |
| 05. களனி கங்கை | 06. நில்வள கங்கை | 07. மீ ஓயா | 08. கும்புகன் ஓயா |
| 09. களு கங்கை | 10. தெதுறு ஓயா | 11. மாதுறு ஓயா | 12. பறங்கி ஆறு |
| 13. வளவ கங்கை | 14. கலா ஓயா | 15. கல்லோயா | 16. மல்வத்து ஓயா |

## இலங்கையிலுள்ள நதிகள், நீர்வீழ்ச்சிகள் பற்றிய தகவல்கள்

01. இலங்கையில் மிக நீளமான நதி - மகாவலி கங்கை
02. மகாவலி கங்கை எந்த மலையிலிருந்து ஊற்றெடுக்கின்றது?
    சிவனொளிபாத மலையை அண்டியிலுள்ள கற்றன் மேட்டுநிலத்தில்
03. நதிகள் கடலுடன் கலக்குமிடம் - கழிமுகம்
04. மகாவலி கங்கையின் நீளம் - 338 Km. இது முக்கோண வடிவில் அல்லது விசிறி வடிவில் காணப்படும்.
05. மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் இடங்கள் - திருகோணமலை, கொட்டியாரக் குடா
06. நீரை வெவ்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்ல மனிதனால் வெட்டப்படுவது - வாய்க்கால்
07. மலைப்பகுதியில் இயற்கையாகத் தோன்றும் ஊற்று நீரை ஒன்றாகச் சேர்த்துப் பள்ளத்தாக்கு ஊடாகப் பாய்ந்து செல்வது - நதி, கங்கை, ஆறு
08. இலங்கையின் மிகப் பெரிய நீர்த்தேக்கம் - விக்டோரியா
09. ஆறுகள் ஆழமான பள்ளத்தாக்கில் செங்குத்தாகப் பாயும்போது தோன்றுவது - நீர்வீழ்ச்சி
10. இலங்கையில் மிகப்பெரிய நீர்வீழ்ச்சியான பம்பரகந்த அமைந்துள்ள மாவட்டம் - பதுளை
11. இலங்கையின் உள்ள அழகிய நீர்வீழ்ச்சி - துன்கிந்த, தியலும
12. நீர்மின்சாரம் உற்பத்தியாக்கத்திற்குப் பயன்படும் நீர்வீழ்ச்சிக்கள் - அபர்டின், லக்ஸபானா, விக்டோரியா
13. சிவனொளிபாத மலைப் பகுதியால் ஹற்றன் மேட்டுநிலத்தில் உற்பத்தியாகும் ஆறுகள் - மகாவலிகங்கை, களனி கங்கை, வளவ கங்கை.
14. இலங்கையில் உள்ள நீர்த் தேக்கங்கள் - விக்டோரியா, கொத்மலை, உடவளவை, போவர்த்தன

## பிரதான ஆறுகளும் அவை கடலுடன் கலக்கும் இடங்களும்

01 மகாவலி கங்கை - திருகோணமலை
02. களு கங்கை - களுத்துறை
03. களனி கங்கை - கொழும்பு
04. வளவ கங்கை - அம்பாந்தோட்டை
05. நில்வள கங்கை - மாத்தறை

## இலங்கையிலுள்ள நீர்வீழ்ச்சிகள்

| நீர்வீழ்ச்சி | உயரம் (மீற்றரில்) | அமைந்துள்ள ஆறு |
|---|---|---|
| துன்கிந்த | 55.6 மீ | மகாவலி கங்கை |
| தியலும | 171 மீ | மகாவலி கங்கை |
| பம்பரகந்த | 241 மீ | வளவ கங்கை |
| கிரிந்தி | 165 மீ | களு கங்கை |
| இராவணா | 49 மீ | கிரிந்தி ஓயா |
| ரம்பொட | 119 மீ | மகாவலி கங்கை |
| அபர்டின் | 90 மீ | களனி கங்கை |